ஆதாரக்கல்வி

கல்வி 7 ஜூன் 1954 கலைகள் 1 & 2

பொருளடக்கம்

		பக்கம்
1.	—தலையங்கம்	1
2.	44-வது ராஜ்ய கல்வி மகாநாட்டில் வி. எஸ். தியாகராஜ முதலியார் வரவேற்புரை	2
3	44-வது ராஜ்ய கல்வி மகாநாட்டில் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் தலைமைஉரை	5
4.	புதுக் கல்வி திட்டம்	9
5.	உபநிஷதச் சிறு கதைகள் —'ஆசி'	11
6.	சர்க்கார் அறிக்கை	14
7.	வீண் குரோதம் வென்றது	20
8.	திருப்பாவை திருவெம்பாவை —ஸ்ரீமான் திரு. ரா. கோவிந்தராஜ ஐயர், B.A.L.T.	22
9.	மக்கள் விரும்பாத கல்வி முறையை திணிக்க முடியாதென்கிறார்	அட்டை 2
10.	குறுகிய திருஷ்டி வேண்டாம்	அட்டை 3

ஆண்டு சந்தா 3-0-0

தனிப் பிரதி 0-4-0

ஆதாரக்கல்வி காரியாலயம்

நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,

சென்னை-1.

மக்கள் விரும்பாத கல்வி முறையை திணிக்க முடியாதென்கிறார்

சென்னை ராஜ்ய கல்வி மகாநாட்டை கல்வி மந்திரி ஸ்ரீ. சி. சுப்ரமணியம் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

மற்ற இலாக்காக்களைவிட கல்வி இலாகா மிகவும் கஷ்டமானதால் கல்வியில் அனுபவமிக்கவர்களிடம் எனது பிரச்னைகளைத் தெரிவிக்கவே நான் இம்மகாநாட்டில் கலந்து கொள்கிறேன். கல்வி முறை தீவிரமாக மாற்றி அமைக்கப்பட வேண்டியது அவசியமென்பதையும் தற்போதைய கல்வி முறை சர்க்கார் உத்யோகத்திற்கே ஆட்களைத் தயாரிப்பதாக இருக்கிறது என்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். தற்போதைய கல்வி முறை இக்காலத் தேவைப்படி சுயதேவைப் பூர்த்தியானதல்ல. ஆரம்பக் கல்வி கட்டம் செகண்டரி கட்டத்திற்கும் செகண்டரி கட்டம் சர்வ கலாசாலை கட்டத்திற்கும் பின்னர் சர்க்கார் சர்வீசுக்கும் மாணவர்களை தயாரிப்பதாகவே கல்வி முறை இருக்கிறது. கல்வியின் ஒவ்வொரு கட்டத்திலும் மாணவர்கள் சமூகத்திற்கு உபயோகமான வகையில் கல்வி முறையில் மாறுதல் அவசியம். எந்தவிதமான மாறுதலானாலும் பிரச்னையின் எல்லா அம்சங்களையும் நன்றாக பரிசீலித்து முறையான வகையில் செய்யப்பட வேண்டும். ஆசிரியர்கள் கல்விமான்களின் அனுபவ மிக்க யோசனைகளினாலும் ஒத்துழைப்பினாலும்தான் இது சாத்யம். அவசர கோலமாக ஏதாவது முடிவு செய்தால் லட்சக்கணக்கான குழந்தைகளின் வருங்காலம் நாசமடைந்துவிடும்.

புதுக் கல்வித் திட்டம்

புதுக் கல்வித் திட்டம் கைவிடப் பட்டது பற்றி ஸ்ரீ. சுப்பிரமணியம் பிரஸ்தாபிக்கையில் இத்திட்டம் எவ்வளவுதான் நல்லதாக இருந்தாலும் ஜனங்களைக் கலந்தாலோசிக்காததால் இத்திட்டத்தை ஜனங்கள் ஏற்கத் தயாராக இல்லை என்றார்.

"இது ஜனநாயகம். மக்கள் கருத்துக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாது. எதையும் நிர்ப்பந்தமாக திணிப்பதற்கில்லை".

மத்ய சர்க்கார் உதவி அளித்தாலும் கூட தற்போதைய நிதி நிலைமையில் குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவது சாத்யமில்லை என்றும் ஜனங்கள் முன் வந்து பணச் செலவில் பங்கு கொண்டாலொழிய ஆசிரியர் விஷயத்தில் அதிகம் ஒன்றும் செய்வதற்கில்லை என்றார்.

ஆதாரக்கல்வி

ஆசிரியர்: அ. கி. சு. சர்மா

கல்வி 7 | ஜய, வைகாசி—ஜூன் 1954 | கலைகள் 1 & 2

கல்விச் சீர்திருத்தத்தைப்பற்றி ஒவ்வொரு நாளும் அபிப்பிராயங்கள் வந்தவண்ணமிருக்கின்றன. லட்சியவாதம் பேசும் பலர் நாட்டில் தோன்றிவிட்டனர். அரசியல் வாதிகளிடையே கல்வி பிரச்னைகள் அடிபட்டு வருகின்றன. மாறுதல்கள் பல தோன்றிக் கொண்டுதானிருக்கின்றன. எல்லாம் கல்விச் சீர்திருத்தமென்ற முறையில்தான் நடந்து வருகின்றன. உண்மையில் கண்டது என்ன என்பதைச் சற்று நிதானித்து பார்ப்போமேயானால் ஆரம்பக்கல்வி கட்டத்தில் ஒருவித முன்னேற்றத்தையும் கணிசமாகப் பார்க்க எதுவும் உருவாகவில்லை என்பதைப் பலர் அறியலாம்.

எதிர்கால பிரஜைகளைத் தயாரிக்கும் முக்யமான பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் பள்ளிக்கூட ஆசிரியர்களின் நிலை திருப்திகரமானதாக இருக்கவில்லை. அவர்கள் தமது பொறுப்பைத் திறமையாக நிறைவேற்ற வேண்டுமானால் இன்னும் அதிகவசதிகள் செய்துகொடுக்கச் சர்க்காரும் பொதுமக்களும் முன்வர வேண்டும். சம்பள உயர்வு என்பது சர்க்காரின் சக்தியைப் பொறுத்துத்தானிருக்கிறது. கல்வி மந்திரி ராஜ்ய மகாநாட்டில் பேசும்பொழுது, "சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்!" என்று சொல்லி விட்டார். மத்தியசர்க்கார் உதவிசெய்ய முன்வந்தால்கூட சம்பள உயர்வு சாத்தியமில்லை என்று கல்வி மந்திரி கூறி இருப்பது ஏமாற்றமளிப்பதாய் இருக்குமென்பதில் சந்தேகமே இல்லை.

என்றுதான் ஆசிரியர்களுக்குக் கதிமோக்ஷமோ? மத்ய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் சேர்ந்து ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்த முடியாவிட்டால், பொதுமக்கள்தான் ஆசிரியர்பால் இரக்கம் காட்டவேண்டும். எனவே தனவந்தர்கள் இப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவரவர் ஊர்களிலேயே ஆசிரியர்களுக்கு வேண்டிய வசதிகள் அளித்து, ஆதரவு காட்டிப் பல குருகுலங்களை நிர்வகித்து நாட்டின் கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டும். கேவலம் அரசியல் வாதிகளால் மட்டும் இத்தகைய பிரச்னைகள் சிக்கலின்றிச் சீர்த்திருத்தம் செய்ய இயலாததைப் பலர் அறிய வேண்டுகிறோம்.

44-வது ராஜ்ய கல்வி மகாநாட்டில்

வி. எஸ். தியாகராஜ முதலியார் வரவேற்புரை.

பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் தேவைபற்றி வலியுறுத்தல்

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் தமது வரவேற்புரையில் கூறியதாவது:—

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்து அதனை நடத்தி வைக்க டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியாரைத் தவிர பொருத்தமான யாரையும் சென்னை ராஜ்ய ஆசிரியர் கில்டு தேர்ந்தெடுத்திருக்க முடியாது. சிறந்த கல்வியாளரும், வைத்திய நிபுணருமான ஸ்ரீ. முதலியார் நம் நாட்டினர் பாராட்டுதலையும், மதிப்பையுமின்றி பிறநாடுகளின் பாராட்டையும் பெற்றிருக்கிறார். ஆகவே சர்வதேச புகழ் படைத்த ஒருவர் நம்மிடையே தலைமை வகிக்க வந்திருப்பது நமது அதிர்ஷ்டந்தான். இம்மகாநாட்டை ஆரம்பித்து வைக்க ஸ்ரீ சுப்பிரமணியம் இசைந்ததற்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். கல்வி, நிதி இலாகாக்களின் பொறுப்புகளை வகித்து வரும் மந்திரியாவர் அவர். கல்வித்துறை சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்வதில் அதிக சிரத்தை காண்பித்து வருவது எல்லோருக்கும் தெரியும். அவர் இம்மகாநாட்டில் கலந்து கொள்வதும், ராஜ்யத்தின் வருங்காலக் கல்விக்கு நல்ல சூசகமாகும். கல்விக் கண் காட்சியைத் திறந்து வைக்க சம்மதித்துள்ள கல்வி இலாகா டைரக்டர் ஸ்ரீ எஸ். கோவிந்தராஜுலுவுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். அவர் கல்வித்துறையில் செய்துள்ள சேவையையும் பாராட்டுதற்குரியது.

ராஜ்யக் கல்வி மகாநாடு இரண்டாவது தடவையாக (17 வருஷங்களுக்கப்புறம்) தஞ்சையில் நடைபெறுகிறது. 20 வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட நம் நாட்டிலும் குறிப்பாக நம் ராஜ்யத்தில் கல்விப் பிரச்னைகள் பெரிதும் மாறிவிட்டன. சுதந்திரத்திற்குப் பின் கல்விக் கொள்கைப் பற்றிய நோக்கங்கள் மாறி வருகின்றன. இந்நோக்கங்களுக்கு ஏற்ப கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டும். ஒரு நாடு திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய வேண்டிய காரியங்களுள் கல்வி முக்கியத்வம் வாய்ந்ததாகும். நாடானது மேற்கொள்ளும் கடமைகளை உத்தேசித்து கல்வி வகுக்கப்பட வேண்டும். ஜனநாயக அமைப்பில் நாட்டின் விவகாரங்களில் மக்கள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருப்பதால் கல்வி முக்கியத்வமானதாகும். மக்களின் கூட்டுறவு, கட்டுப்பாடான பிரஜைப் பொறுப்பு மூலமே ஜனநாயகம் வெற்றியடைய முடியும். உரிமைகளுக்கு முன்னதாகப் பொறுப்புக்களை வகிக்க மக்களுக்கு பயிற்சியளிப்பதில் கல்வித் திட்டம் உதவ வேண்டும். கலாசார தேவைகளையும் அது பூர்த்தி செய்யவேண்டும்.

அதிகக் கல்வி வசதி தேவை

நமது ஜனத்தொகையை உத்தேசிக்குமிடத்து ஏற்கெனவே இருக்கும் கல்வி வசதிகள் போதா. அரசியல் சட்டம் அமலுக்கு வந்த 10 வருடங்களில் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச

கட்டாயக் கல்வி அளிக்க வேண்டு மென்று சட்டம் கூறுகிறது. நம் நாட்டில் 17 சத விகிதத்தினரே கல்வி கற்றவர்கள். 5 வருஷத்திட்டத்தில் பாதிக்கு மேல் ஆகிவிட்ட போதிலும் நாம் லட்சியத்தைக் கிட்டக்கூட நெருங்கவில்லை.

தொழில் நுணுக்க தொழில் கல்விக்கு போதிய வசதிகளில்லாததும் மற்றொரு பிரச்னையாகும். இதனல் தேவைக்கும், போக்குக்கும் பொருத்தமில்லாதபடி அதிகமானவர்கள் பொதுக் கல்வியைக் கற்க வேண்டியிருக்கிறது. எட்டுப்படிப்பு அளவுக்குமீறி வற்புறுத்தப்படுகிறது. இதன் விளைவாக படித்தவர்கள் சர்க்கார் உத்தியோகங்களையும், வர்த்தக ஸ்தாபனங்களில் உத்தியோகங்களையும் நாடுகிருர்கள். இதனுலும் சர்வகலாசாலைகளின் பளு அதிகரிக்கிறது. செகண்டரி கல்விக்குப்பின் வேறு மாற்று திட்டமின்றி பல மாணவர்கள் சர்வகலாசாலைகளில் சேர்கிருர்கள். ஆரம்பத்திலிருந்தே அனுஷ்டான ரீதியான யோசனைகளில் கவனம் செலுத்த வேண்டும். செகண்டரி கட்டத்தில் நாட்டின் தேவைக்கும் கல்வி ஸ்தாபனங்கள் வசதிக்கும் பொருத்தமிருக்க வேண்டும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தேவை

நாட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவு; ஆகவே அவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதிகள் அளிக்கப்பட வேண்டும். கல்வி சிரமைப்பிற்கு எற்கெனவே தேர்ச்சி பெற்றவர்கள் மறு பயிற்சி பெறுவதற்கான வசதிகளும் தேவை. இது தீர்க்கப் பட வேண்டிய மற்றொரு பிரச்னையாகும்.

ஆசிரியர்களின் சம்பள விகிதங்களும், சர்விஸ் நிலைமையும் திருப்திகரமாக இல்லை. கல்வியின் தரம் குறைவாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். கல்வித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவது ஆசிரியர்களைப் பொறுத்த விஷயம் என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை. அவர்களுக்கு நியாயமான சம்பளமும், அலவன்ஸ்களும் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர் தொழில் உன்னத தொழில் என்று கூறப்படுகிறது. ஆகவே இத்துறையில் உள்ளவர்கள் தேச சேவை செய்வதாகக் கருதுகிருர்கள். அவர்கள் வசதியான வாழ்க்கை நடத்துவதற்கு உதவியளிப்பது நமது கடமையாகும். இதற்கு ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். ஆந்திர சர்க்காரால் நிறுவப்பட்ட கமிட்டி அங்கு ஆசிரியர் சம்பள விகிதங்களை உயர்த்த சிபாரிசு செய்திருக்கிறது. இம்மகாநாட்டில் நிறைவேறும் தீர்மானங்களை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிப்பார்களென்று நம்புகிறேன். மற்ற ராஜ்யங்களில் தொழிற் சங்க அடிப்படையில் போன்றல்லாமல் நம் ராஜ்யத்திலுள்ள ஆசிரியர்கள் மிகவும் அடக்கத்துடன் நடந்து கொண்டிருப்பது திருப்தியளிக்கக் கூடிய விஷயம்.

கல்விச் சீர்திருத்தம்

கல்விச் சீர்திருத்தம் அதிக ஜாக்கிரதையுடன் விடுக்கப்பட்டு பின்பு அமல் நடத்தப்பட வேண்டும். இவ் விஷயத்தில் அவசரப்பட்டு எதுவும் செய்தால், சிக்கல்கள் எற்படும். நம்மிடையே அனுபவமிக்க சிறந்த கல்வியாளர்கள் இருப்பது அதிர்ஷ்டவசமாகும்.

எலிமெண்டரி கல்வி, செகண்டரி கல்வி, சர்வகலாசாலைப் படிப்பு முதலியன பற்றி சாதாரண பிரஜை என்ற முறையில் எனக்குத் தோன்

றிய சில யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிரைமரி கல்வி சிறுவர் சிறுமியர் ஒவ்வொருவருக்கும் போதிக்கப்பட வேண்டும். மகாத்மா காந்தி கூறியது போல அது கைவேலைத் தொழில் அடிப்படையில் அமைய வேண்டும். பின் தங்கிய வகுப்பினர் குழந்தைகளுக்கு விசேஷ வசதி யளிக்க வேண்டும். இதுபற்றிய சர்க்கார் முடிவு செய்யவேண்டும்.

எலிமெண்டரி கல்வி பற்றி குறிப்பிடுகையில், நர்ஸரி பள்ளிக்கூடப் படிப்பு கட்டம் போன்ற பூர்வாங்க எலிமெண்டரி கல்வி கட்டம் பற்றியும் ஞாபகத்திற் கொள்ள வேண்டும். பெரிய நகரங்களில் வசிக்கும் பணக்கார மத்தியதர வகுப்பினர் குழந்தைகளுக்கு இவ்வசதி கிடைக்கிறது. ஏழைகளுக்கு இவ் வசதி கிடைப்பதில்லை. அவர்களும் இதை பெற வேண்டும், இது பற்றி சர்க்கார் பரிசீலிக்க வேண்டும்.

நம் தலைவர் முன்னிலையில் கல்வி பற்றி நான் குறிப்பிடத் தயங்குகிறேன். அதற்கு நியமிக்கப்பட்ட கமீட்டியின் தலைவராக இம் மகா நாட்டுத்தலைவர் சேவை செய்துள்ளது நமக்குத் தெரியும் 6 மாதகாலம் அவர் நாடெங்கும் சுமார் 50 இடங்களுக்கு மேல் சென்று நூற்றுக்கணக்கானவர்களைச் சந்தித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மத்ய சர்க்கார் அதைபரிசீலனை செய்து வருகிறது. முக்கிய சிபாரிசுகள் அமல் நடத்தப்படும் என்று நம்புகிறோம். சில சிபாரிசுகள் பலருடைய ஆதாவைப்பெற்றிருக்கின்றன. செகண்டரி கல்விப் படிப்பு ஒரு வருஷம் அதிகரிக்கப்பட்டு சர்வகலாசாலை கட்டத்தில் ஒரு வருஷம் குறைக்கப்பட்டிருப்பது பற்றி அபிப்ராய பேதம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இதற்கு ஆதரவு படிப்படியாக ஏற்பட்டு வருகிறது. இம்மகாநாட்டிலும் அந்த அறிக்கையில் காணப்படும் சிபாரிசுகள் பரிசீலனை செய்யப்படும் என்று நம்புகிறேன்.

தொழில் நுணுக்க டெக்னலஜி கல்வி அதிக முக்யத்வம் பெற்று வருகிறது. தொழிற் கல்விக்கு ஆதரவு அவசியமென்பதை உணர்ந்து வருகிறார்கள்: செகண்டரி கல்வி இதை யனுசரித்து சீர்திருத்தப்படுகிறது,

சர்வகலாசாலை படிப்பு பற்றியும் நான் பேச நமது தலைவர் முன்னிலையில் தயங்குகிறேன். ஏனென்றால் அவர் சர்வகலாசாலையின் உப அத்யட்சகராக தொண்டாற்றி அனுபவம் பெற்றவர். அவர் இத்துறையில் நமக்கு வழிகாட்டுவார் என்று நம்புகிறேன். அவர் கல்வி சம்பந்தமான மேல்நாட்டு மகாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார். இங்கு சர்வகலசாலைப் படிப்பும் காலத்திற்கேற்ப உருவாகிறது.

சர்வகலா சாலை கட்டத்தில் போதனு பாஷை பற்றியும் இம்மகாநாட்டில்: பரிசீலனை செய்ய வேண்டும். ஆங்கிலம், பிரதேச பாஷை, இலக்கிய மொழிகள் பெற வேண்டிய இடம் பற்றியும் விவாதித்து முடிவு செய்ய வேண்டும்.

சர்வகலாசாலைகளில் அடுத்துவரும் பல வருஷங்களுக்கு ஆங்கிலமே போதனு பாஷையாக இருக்க வேண்டும் என்பது எனது நம்பிக்கையாகும். செகண்டரிகட்டத்தில் அது இரண்டாவது கட்டாய மொழியாக போதிக்கப்பட வேண்டும். அரசியல், ராஜதந்திர வர்த்தகத்துறையில் உலகில் மற்ற நாடுகளுடன் தொடர்புக்கு ஆங்கிலம் தெரிவது அவசியமாகும்.

பொது நிர்வாகம், தொழில் நிர்வாகம் பற்றியும் இளைஞருக்கும் யுவதிகளுக்கும் பயிற்சியளிக்க கல்வி ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம். பின்பு அவர்கள் ஸ்தானீகராகப் பதவிகளை அயல்

(அட்டை 3-ல் பார்க்க)

44-வது ராஜ்ய கல்வி மகாநாட்டில்

டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியாரின் தலைமை உரை

டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியார் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

இன்று நம் நாட்டின் கல்வி பிரச்னைகள் ஏராளமானவை. மாறுபட்டவை. அத்துடன் சிக்கல் நிறைந்தவை. அரை நூற்றுண்டுக்கு முன்பிருந்த கல்வியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்நாட்டிலாகட்டும் அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலாகட்டும் மக்களை எதிர் நோக்கியுள்ள பிரச்னை கல்வி என்பதை உணர்வார்கள். இனி அதை ஒரு சிலரின் உரிமை என்று நினைப்பதற்கில்லை. சகலருக்கும் கல்வியளிக்கும் இந்த பிரச்னையில் கணிசமான அளவினருக்கு மேல் படிப்பு அளிக்கப்பட்டு மக்களிடையே கல்வியைப் பரப்புவது அவர்கள் கடமை என்பதையும் உணர வேண்டும். ஆகவே செகண்டரி கல்விக்கும் மேல் படிப்புக்குமிடையே சம்பந்தமிருக்கிறது என்பதை அசட்டை செய்யக்கூடாது.

நாட்டு நலனும் இருக்கிறது

கல்வியானது தனிப்பட்டவர்களுக்கு நன்மையை அளிப்பதோடில்லாமல் சமூகத்தினுடையவும் தேசத்தினுடையவும் தேவைக்கு உதவி செய்வதாக இருக்கவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வயது வரை ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியளிக்கப்பட்டு அதற்குப் பிறகு அவர்களுக்குத் தகுதியான துறைகளில் பயிற்சி பெறலாம் என்பது சரியன்று இந்த பருவத்தில், ஒரு விஷயத்தை மட்டும் தெரிந்துகொள்கிற படிப்பு எல்லா மாணவர்களினுடைய தேவையையும் பூர்த்திசெய்யாது. இதை மனதிற்கொண்டுதான் செகண்டரி கல்வி கமிஷன் சிபாரிசுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

வேலையில்லாத் திண்டாட்டம்

தற்போதைய கல்வி முறை நீடிக்குமானால் நாட்டில் படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னைக்குப் பரிகாரம் காண்பதிலுள்ள சிரமத்தை, மேலும் அதிகரிக்கத்தான் செய்து விடும். நாட்டில் படித்த இளைஞர்களிடையே வேலை கிடைக்காததனால் உள்ள சோர்வும் ஏமாற்றமும் சமுதாயத்தின் சமூக நலத்துக்கு விரோதமான போக்கில் இறங்கச் செய்து விடும். இந்தப் பிரச்னை தான் இளைஞர்களை உபயோகமுள்ளபிரஜைகளாகச் செய்வதற்கனுகுணமான வழியில், புது முறையில் கல்வியைப் புகுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கான யோசனைகளைக் கூற இரு கல்வி கமிஷன்கள் நிய

மிக்கப்படுவதற்குக் காரண மாயிற்று.

பாஷைப் பிரச்னை

அவசரமான பரிகாரம் காண்பதற்கான பல பிரச்னைகள் இருக்கும் சமயத்தில் இந்த பாஷைப் பிரச்னை தோன்றியிருப்பது துரதிருஷ்டமே யாகும். மக்களிடையே அறிவைப் பரப்புவதற்கு அந்நிய பாஷையை உபயோகிப்பது சரியான முறை இல்லை தான். ஆனால் கல்வியின் கட்டத்தை மனதிற் கொண்டு பாஷை பிரச்னை கவனிக்கப்பட வேண்டும். ஆரம்பக் கட்டத்தில் போதனா பாஷை தாய் பாஷையாகவே இருப்பதுதான் சிறந்தது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும். செகண்டரி கட்டத்துக்கும் இது பொருந்தலாம். ஆனால் மேல்படிப்பு பிரச்னை வரும்போது எந்த வழியில் விஷய ஞானத்தைப் பெறுவதென்பது பாஷைப் பிரச்னையைப் போலவே முக்கியமானதாகும்.

ஆங்கிலத்தின் அவசியம்

இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் முதலியார் ஆங்கில பாஷை சர்வதேச பாஷையாக இருக்கும் அதன் முக்கியத்தைக் குறிப்பிட்டு விட்டுப் பேசியதாவது.

விஞ்ஞானம், தொழில் நுணுக்க அறிவு ஊட்டும் நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் தான் இருக்கின்றன. எந்தத் துறையிலும் உயர்தர கல்விப் பெறுவதற்கு ஆங்கிலம் முக்கியமான சாதனம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆங்கில பாஷையிலுள்ள நூல்களை தாய் பாஷையில் மொழி பெயர்ப்பதன் மூலம் ஆங்கிலத்தை அகற்றிவிடலாமென்று கூறுவது கார்யசாத்யமல்ல. இதுவரை தாய்பாஷையில் மொழி பெயர்க்க எத்தனையோ தடவைகள் முயற்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் மூல நூல்களிலுள்ள ஜீவகளை மொழி பெயர்ப்பில் ஏற்படவில்லை படிப்படியாகவும் நீண்டகால முயற்சியாலுமே பிரதேசபாஷைகள் மூலம் உயர்தர கல்வியை போதிக்க முடியும். அது நீண்ட கால திட்டமாகத் தான் அமைய முடியும். ஆகவே ஆவேசமானப் பிரசாரங்களால் அந்த லட்சியத்தைத் துரிதமாக சாதித்து விட முடியாது. இன்னும் சிறிதுகாலத்துக்கு தாய்மொழி மூலமாக உயர்தரக் கல்வியைப் போதிப்பது சாத்யமல்ல.

ஆங்கிலத்தை உடனே ஒழித்து விட வேண்டுமென்று கூறுவது குறுகிய போக்குடன் கூறப்படும் காரிய சாத்யமற்ற யோசனையாகும்.

கல்வி துறையில் அரசியல் ஆதிக்கத்திலுள்ளவர்கள் தலையிடுவது தான் பெரிய சிரமமாக இருக்கிறது.

கல்வி பிரச்னைகள் பற்றி போதுமான அவகாசமோ சந்தர்ப்பமோ அவர்களுக்குக் கிடையாது. கல்வி துறையில் திடீர் மாறுதல்கள் செய்வதால் ஏற்படக் கூடிய அபாயங்களையும் அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. அரசியல் ஆதிக்கத்திலுள்ளவர்களின் கட்டளைகளின்

படி கல்வி சீர்திருத்தத்தின் போக்கு, அமைக்கப்பட்டால் பெரிய ஆபத்தான விளைவுகள் ஏற்படும். அதனால் கல்விக்கு மட்டுமின்றி நாட்டின் முன்னேற்றத்துக்கும் பல வழிகளில் ஆபத்து ஏற்படும். கல்வி பிரச்னைகளில் உபாத்தியாயர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்கத் தயங்கக் கூடாது ஆனால் கருத்துக்களை கோபத்துக்கும் இடம் தராமல் அடக்கமாகவும் அரசியல் சர்ச்சைகளில் ஈடுபடாமலும் தெரிவிக்கவேண்டும். சர்ச்சைகளினால் ஒளிக்கும் பதில் தாபமே ஏற்படும்.

கல்வித் தரம்

ஆரம்பக்கல்வி பெறவேண்டியவர்களின் தொகை அதிகரித்து விட்டபடியால் சில சமயங்களில் கல்வித் தரத்தை ஓரளவு குறைக்க வேண்டியிருக்கலாம். ஆனால் தரம் மிகவும் குறைந்து விட்டால் கல்வியின் நோக்கமே முறியடிக்கப்பட்டு விடும். ஆரம்பக்கல்வி போதிப்பது சுலபமான விஷயமென்று கருதி அரைகுறை படிப்புள்ளவரை ஆசிரியர்களாக நியமித்து விடலாமென்ற எண்ணம் தவறானது. ஆரம்பக்கல்வி தான் சிறுவர்களின் எதிர் கால முன்னேற்றத்துக்கு ஜீவநாடி. ஆகவே நல்ல யோக்யதாம்சம் பெற்றவர்களையே ஆரம்பக்கல்வி உபாத்தியாயர்களாக நியமிக்க வேண்டும்.

உபாத்தியாயர்களுக்கு உற்சாகம் ஏற்பட வேண்டுமானால் அவர்களுக்கு ஓரளவு சுதந்தரமளிப்பதவசியம்.

பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயர்களின் பொருப்பு முக்யமானது. அவர்கள் உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் நண்பராகவும் உபதேசகராகவும் வழி காட்டியாகவும் இருப்பதவசியம் பள்ளிக்கூடத்துக்குப்புறம்பான வேலையிலும் மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும்.

சரீர உழைப்பின் பெருமையை மாணவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் நடக்கும் வேலைகளுக்கு விளம்பரம் வேண்டுமென்று ஆசைபடக் கூடாது. விளம்பரம் கிடைக்குமென்று தெரிந்தாலொழிய உற்சாக மேற்படாமற் போய் விடும். ஆகவே, விளம்பரப் பித்தை விட்டொழிக்க வேண்டும். இந்தியாவைப்போல் நான் கண்ட எந்த அயல்நாட்டிலும் பள்ளிக்கூட நிகழ்ச்சிகள் பற்றி பத்திரிகைகளில் இவ்வளவு ஏராளமாக செய்திகள் வருவதில்லை.

பள்ளிக்கூடங்களில் பிரசங்கம் செய்ய கண்டவர்களை அழைக்கக் கூடாது, அரசியல் சர்ச்சைக்கிடமான பேச்சுகளிலும் வேலைகளிலும் கல்வி ஸ்தாபனங்கள் ஈடுபடக் கூடாது.

சரீர உழைப்பின் பெருமை

மாணவரிடையே சரீர உழைப்பின் பெருமையையும் தொண்டு மனப்பான்மையையும் புகட்ட வேண்டும். ஒருவாரம் அல்லது

2 வாரங்கள் மாணவர்களை வேலை முகாம்களுக்கு அழைத்துச் சென்று விளம்பரப் படுத்துவது அதற்கு வழியல்ல. சிறு பிராயத்திலிருந்தே அத்தகைய மனப்பான்மையை ஊட்டவேண்டும். பள்ளிக்கூடங்களை சுத்தம் செய்தல், தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற வேலைகளில் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

உரிமை சாசனம் தயாரிக்கவேண்டும்

உபாத்தியாயர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்றும் உத்யோக சீர்திருத்தம் வேண்டுமென்றும் வற்புறுத்தி அக்ராசனர் சொன்னதாவது: செகண்டரி கல்வி கமிஷன் சிபாரிசுகள் தாராளமாக இல்லாவிட்டாலும் இப்போதைக்கு அந்த சிபாரிசுகளைப் பின் பற்றலாம். ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்துவதில் காலதாமதம் செய்தால் நாட்டின் முன்னேற்றம் தடைபடும்.

உத்யோகத்தில் ஸ்திரத்தன்மை, உரிமைகள், பிறர் தலையீட்டிலிருந்து பாதுகாப்பு, பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து அப்பீல் செய்துகொள்ள வசதி போன்றவைகளை வரையறுத்து உபாத்தியாயர்களின் உரிமை சாசனம் தயாரிக்கவேண்டும்.

ஆதாரக்கல்வியே மக்களின் சுயமரியாதையை வளர்க்கும்

வாழ்க்கை முறைப்பற்றி ஆசிரியர் நன்றாக உணர்ந்து இருந்தால் தான் குழந்தைக்கும் சரிவர போதிக்க முடியும். ஆசிரியர்கள் போதனை, பொறுமை, சேவை, தியாகம், பிரார்த்தனை ஆகிய முறைகளிலும், நம்பிக்கைகளிலும் கவனம் செலுத்தினால் மாணவர்களை நன்றாக பயிற்றுவிக்க முடியும். ஆசிரியர் தொழிலைப் பணம் சம்பாதிக்கும் ஒன்றாகக் கருதாமல் சேவையாகக் கருதவேண்டும்.

இப்பொழுதுள்ள வேலையில்லா நிலைமைக்குக் காரணம் இன்றைய கல்வி முறையானால் அது மாற்றப்படவேண்டும். மனிதனைப் பூரணத்துவம் அடையச் செய்யும் பயிற்சி அளிக்கப்படவேண்டும். எழுதுவதற்காக மூன்று விரல்களை உபயோகிப்பதை விட்டு, தொழில் செய்ய பத்து விரல்களை உபயோகிக்கக் கற்றால் வாழ்க்கையில் வெற்றி கிட்டுவது நிச்சயம்.

சமூகப் புரட்சி ஏற்படக் கூடிய நிலையில் நாடு இருக்கிறது. சமூக நிலைமையை உதாஸீனப்படுத்தினால் சுதேசி கம்யூனிஸம் வளர ஏதுவாகும். இதைத் தவிர்த்து மக்களைக் காப்பாற்ற ஒரே வழி ஆதாரக்கல்வி அளிப்பது தான். ஆதாரக்கல்வி மக்களை சுய மரியாதையுடன் வாழச் செய்யும். பிற்பட்ட மக்களுடைய மதிப்பை வளர்க்கும். ஆட்சி நடத்துவோர் பொது மக்களுக்குத் தேவையான இந்த ஆதாரக் கல்வியைத் தருவதே சிலாக்கிய மானதாகும்.

1951-52, 52-53-ல் முறையே ரூ. 18,84,034-ம் ரூ. 22,90,224-ம் ஆதாரக்கல்விக்காக பிரிவினை செய்யப்படாத சென்னை ராஜ்யத்தில் செலவிடப்பட்டது. இனி ஆதாரக்கல்வி பயிற்சி அற்ற பயிற்சிப் பள்ளிகளைத் திறக்காததோடு இதர பயிற்சிப் பள்ளிகளையும் ஆதாரக்கல்விப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்ற சர்க்கார் உத்தேசித்துள்ளது பாராட்டத்தக்கதே.

புதுக் கல்வி திட்டம்

ராஜாஜி முதல் மந்திரியாக இருந்த காலத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட புது ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டு விடுவதென்று சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளதாகக் கல்வி மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமண்யம் அசெம்பிளியில் அறிவித்தார். சென்ற ஒரு வருஷமாகச் சென்னை ராஜ்யத்தின் நாணயமான அரசியல் வாழ்வையே உருக்குலைத்துக் கொண்டிருந்த இந்த விஷயம் இவ்வாருக முடிந்தது. துரதிர்ஷ்டவசமான இந்தச் சர்ச்சையில் ஒரு தரப்பினர் வெற்றியடைந்தனர் அல்லது மற்ருெரு தரப்பினர் தோல்வியடைந்தனர் என்று சிலர் லாப நஷ்டக் கணக்குப் பார்க்க முயற்சிக்கலாம். ஆனல், இதைப் போன்ற அசட்டுத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. ஏனெனில், சொந்த முறையில் இந்த விஷயத்தில் யாருக்கும் அக்கறை கிடையாது, சமூகத்திலுள்ள ஒரு குறை பாட்டை நீக்குவதற்காகத் தனக்குச் சரி என்று தோன்றிய ஒரு காரியத்தைப் பழைய மந்திரி சபை செய்தது. இப்போதுள்ள மந்திரி சபை தனக்குச் சரி என்று தோன்றிய விதத்தில் வேறு விதமாக முடிவு செய்திருக்கிறது. ஆகவே, இதில் வெற்றி, தோல்வி என்ற பிரச்னைக்கே இடமில்லை.

கல்வி மந்திரியின் அறிக்கையைக் கவனமாகப் படிப்பவர்களுக்கு ஒரு விஷயம் நன்கு புலப்படும். புதுத் திட்டம் தவறானதென்ருே, அனுபவசாத்தியமற்றதென்ருே எந்த இடத்திலும் அவர் சிறிதும் ஒப்புக்கொள்ளவில்லை. அதற்கு மாருக, அதன் நல்ல அம்சங்களை மிக மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி விமர்சனம் செய்திருக்கிருர். புதுக் கல்வித் திட்டத்தைப் பற்றி இவ்வளவு தெளிவான முறையில் வேறு யாரும் விமர்சனம் செய்திருப்பதாக நாம் நினைக்கவில்லை. புதுக் கல்வித் திட்டத்தின் நோக்கம் என்ன? பள்ளிக்கூடம் போகும் வயது வந்த எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்பதுதான். எல்லோருக்கும் கல்வி அளிக்க வேண்டுமென்பதில் ஒரு சங்கடமிருந்தது. கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்கள் தமது குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமலிருந்தார்கள். இதற்குக் காரணம் தங்களுடைய குழந்தைகள் படிக்கக் கூடாது என்று அவர்கள் நினைத்தது அல்ல; பிள்ளைகள் தம்முடன் இருந்தால் குடும்ப சம்பாத்தியத்தில் இன்னும் இரண்டணு, நாலணுவாவது அதிகமாகுமே என்று அவர்கள் நினைத்தார்கள். குடும்ப வருமானத்தை ஒரு சிறு அளவுக்காவது பெருக்கக்கூடிய தமது குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு 'கட்டுபடியாகாது' என்று அவர்கள் தயங்கியது இயற்கையே. ஸ்ரீ சுப்ரமண்யத்தின் மதிப்பின்படி இவர்கள் சமூகத்தில் 50 சதவிகிதம் இருக்கிருர்கள். இவர்களை எப்படி பள்ளிக்கூடங்களுக்குக் கொண்டு வருவது? பெற்ருேர்களுக்கு உதவியாகவும், அதே சமயத்தில் படிக்கவும் புதுத் திட்டம் ஏற்பாடு செய்தது. வேறு எப்படித்தான் இவர்களுக்குக் கல்வி போதிக்கப் போகிருேம் என்று அவர் கேட்டார். இதுவரையில் அதற்கு பதில் சொல்லப்படவில்லை. இதற்காகத்தான் புதுத் திட்டத்தில் 'ஷிப்டு' முறை கையாளப்பட்டது. இனிமேல் வேறு ஏதாவது புது ஏற்பாடு செய்தாலும்கூட, இந்த

'லஞ்சப்' முறையைக் கையாண்டா லொழிய, சமூகத்திலுள்ள சரிபாதிக் குழந்தைகள் தெருக்களிலும், வயல் களிலும் திரிந்துகொண்டுதான் நிற் பார்கள் என்று அவர் ஒளிவு மறை வில்லாமல் சொல்லியிருப்பதை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஸ்ரீ. சுப்ரமண்யம் சொன்னது போல் கல்வி என்பது இதுவரையில் சில 'உயர்தர' வகுப்பினருக்கும் வசதியுள் ளவர்களுக்கும் ஏகபோக உரிமையாய் இருந்தது. தொழில்களைச் செய்து அன்றாட ஜீவனம் செய்து கொண்டி ருந்த ஏழைகளுக்குக் கல்வி அளிக்கப் படவே இல்லை. கருமான் மகன் கரு மானுகவேதான் இருந்து கொண்டி ருந்தான். அதைமாற்றிக் கருமான் மகன் கருமான் தொழிலையும் கற்றுக் கொள்வதோடு, படிக்கும் வசதியும் செய்து கொடுக்கப் பட்டது. பின் தங்கிய வகுப்பினருக்குச் சந்தர்ப்பங் கள் அளிக்கவேண்டும் என்றெல்லாம் பேசினுல் போதுமா? இதை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று கல்வி மந்திரி கேட்டிருப்பதற்கும் திருப்திகரமான பதில் இல்லை.

கல்விக்கும், சமூகத்திற்கும் தொடர்பு இல்லாமலே இதுவரையில் இருந்தது. நாலு எழுத்துக் கற்றுக் கொண்டுவிட்டால் ஏதோ புது உல கத்தில் வசிப்பதாக அவர்கள் நினைக்க ஆரம்பித்தார்கள். இதைமாற் றிக் கல்வியை சமூக வாழ்க்கையுடன் இணைப்பதற்குப் புதுத் திட்டம் அஸ் திவாரம் போட்டது தவறு என்று ஸ்ரீ சுப்ரமண்யம் கேட்பதற்கும் பதில் கிடைக்க வேண்டும்.

புதுத்திட்டம் ஏதோ ஜாதி முறையை ஸ்திரப்படுத்துவதாகச் சொன்னார்கள். புதுத்திட்டத்தின் கீழ், உயர்தர வகுப்பினரென்று சொல்லப்படும் பிராமணச் சிறுவர்கள், கிராமத்தில் செருப்புத்தைக்கும் ஹரி ஜனத் தொழிலாளியிடம் சென்று அந்த வேலையைப் பார்த்துத் தெரிந்துகொள்ள சந்தர்ப்பமிருந்தது. இதனுல் ஜாதி வித்தியாசங்கள் ஒழிந்து போகுமென்று நான் உண்மையாகவே நினைத்தேன் என்று ஸ்ரீ. சுப்ரமண்யம் சொல்லுவதை எப்படி மறுக்கமுடியும்.

கல்வி மந்திரி சொன்னதுபோல் இவையெல்லாம் பழைய விஷயங் கள். ஒரு திட்டத்தை ரத்து செய்த பிறகு அதனுடைய நல்ல அம்சங்க ளைப் பற்றிப் புகழ் பாடிக் கொண்டி ருப்பது வீண் வேலையென்று தோன் றலாம். ஆனுல், ஸ்ரீ. சுப்ரமண்யம் சொன்ன ஒரு விஷயத்தைக் கவ னிக்க வேண்டும். இந்தத் திட்டம் குறைபாடுகள் உள்ளது என்ற காரணத்தினுல் அது வெற்றி பெரு மல் போகவில்லை. அது சரியாக வேலை செய்யுமா என்று பரீட்சித்துப் பார்ப்பதற்குக்கூட சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. ஏனெனில், ஆரம் பம் முதலே இதைப் பற்றித் தவருன கோணத்தில் பிரசாரம் ஆரம்பமாய் விட்டது. இப்போது திட்டம் கை விடப்படுகிறது. இனி அமைதி யான சூழ்நிலைக்கு இடமிருக்கிறது. ஆரம்பக்கல்வி எந்த அடிப்படையில் இருக்க வேண்டுமென்பதைப் பரிசீ லனை செய்ய ஒரு புதுக் கமிட்டியை நியமிக்கப் போவதாக சர்க்கார் அறி வித்திருக்கிறார்கள், அந்தக் கமிட்டி பழைய திட்டத்திலுள்ள நல்ல அம் சங்களைச் சுமூகமான சூழ்நிலையில் ஆராயலாம்.

ஏற்கனவே இருந்து வந்த கல்வி முறை திருப்திகரமாக இல்லையென்ப தை யாவரும் ஒப்புக் கொள்ளுகிறார் கள். இதில் அபிப்ராய பேதமே கிடையாது. வியாதி இருக்கிறதென் பது பொதுவான தீர்ப்பு. அதை எப்படித் தீர்ப்பது என்பது தான்

உபநிஷதச் சிறு கதைகள்

(ப்ருஹதாரண்யக உபநிஷதம்)

“ஆசி”

ம்ருத்யுவெனும் அழித்தல் வன்மையில் ஆண்டவனைக் காணல்

ம்ருத்யுவும் முதற்படைப்பும்

படைப்புக்குமுன் யாதுமின்றிய நிலை நிலவியிருந்தது. ‘ம்ருத்யு’ எனும் ஸம்ஹார சக்தியினால் (எதனையும் அருந்துவதே போன்ற அழித்தல்வன்மையினால்) எல்லாம் சூழப்பெற்றிருந்தன. அந்த ‘ம்ருத்யு’ மனமெனும் உள்ளுறுப்பு ஒன்று வேண்டுமெனக் கருதி, அதனைத்தோற்றுவித்துக் கொண்டது. அதனால் தன்னைத் தானே வழிபட்டு மகிழ்ச்சி கொண்டது.(எனவே, அகங்கார தத்துவம் தோற்றங் கொண்டது என்பதாம்). அதனின்று, (ஆகாசம், வாயு, அக்னி என்ற முறையே) ‘அப்’ எனும் நீர் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு வழிபாட்டினால் (அர்ச்சனையால்), (‘கம்’ என்ற சொல்லால் அறியப்படுகின்ற) ‘நீர்’ தோன்றியதால் அதற்கு ‘அர்க்க’ என்ற பெயர் வழங்கலாயிற்று. ‘அர்க்க’ என்ற பெயரின் காரணத்தை அறிவோன், (‘கம்’ என்ற சொல்லாலேயே அறியப்படும்) இன்பத்தை அடைவான்.

இந்த நீர் ‘அர்க்க’ எனப்படுகிறது (என்றோம்). இது நுரை முதலான மாறுதலையடைந்து, உறுதிபெற்று நிலமாயிற்று. இந்நிலத்தில் ‘ம்ருத்யு’ இளைப்பாறுவதே போன்று உறைந்தது. அதன் ஒளிவடிவாக ‘விராட்’எனும் சோதி உருக்கொண்டது. இந்த ‘விராட்’ தன்னை சூரியன், வாயு அக்னி என்ற மூன்று ஒளிகளாக வகுத்துக் கொண்டு, ப்ராணன் எனும் அருநிலையில் எங்குமளாவி

கேள்வி. ராஜாஜி மந்திரி சபை அந்த வியாதிக்கு ஒரு மருந்து கொடுக்க முன்வந்தது. மருந்து மிக சக்தி வாய்ந்ததாயிருக்கலாம். ஆனால், நோயாளியும் வைத்தியருடன் ஒத்துழைத்தால்தான் வியாதி சொஸ்தமாகும். இல்லாதவரையில் வைத்தியரின் முயற்சி பலனளிக்காது. புதுக் கல்வித்திட்டத்தை அமுல் நடத்துவதற்கான சூழ்நிலையும், பொது ஒத்துழைப்பும் கிடைக்கவில்லையென்பதைக் கல்வி மந்திரி ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் திட்டத்தைக் கைவிடுவதைத் தவிர சர்க்காருக்கு வேறு வழியில்லாமலிருக்கலாம். ஆயினும், ஆரம்பக் கல்வியைத் தற்காலத் தேவைகளுக்குத் தகுந்தவாறும், பள்ளிக்கூடங்களுக்கே போகாமலிருக்கும் சமூகத்திலுள்ள சரிபாதிக் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க வசதி செய்யவும் ஏதாவது ஏற்பாடு செய்துதானாக வேண்டும். அந்த சமயத்தில் ராஜாஜி திட்டத்தில் பல அம்சங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

(தினமணியிலிருந்து)

இலங்குகின்றது. கிழக்கிசை அதன் சிரமாகும். இருபுறமுமுள்ள (தென்கிழக்கு வடகிழக்குஎனும்) மூலைத்திசைகள் கைகளாகும். மேற்குத்திசை (புச்சம் அல்லது நீண்ட) கால்களாகும். இருபுறமுமுள்ள (வடமேற்கு, தென்மேற்கு எனும்) மூலைத்திசைகள் இருவிலாப்புறங்களாகும். வானம் (முதுகுஎனும்) பின்புறமாகும்; அந்தரிக்ஷமெனும் இடைவெளி வயிறாகும் இப்புவி மார்பு ஆகும். (இவ்வகையாக விராட்புருஷனைக்கருதி உபாஸனை செய்ய வேண்டுமென்பதாம்). இவ்வாறு ப்ராணனெனும் விராட்புருஷனை எங்குமளாவியோனுகக்கருதுவோன் எங்கு சென்றாலும் உறுதிநிலையை அடைவான்.

ப்ரஜாபதியும் முழுப்படைப்பும்

இந்த விராட் (ம்ருத்யு எனும் அழித்தல் வன்மையினின்று தோன்றியசோதி) தனக்கு மற்றொரு சரீரம் வேண்டுமெனக்கருதி, மனதை வாக்குடன் இணைத்தது. அதன் வித்தாக, ஆண்டின் அதிபனாகிய பிரஜாபதி தோன்றினான். பிராஜாபதியின் தோற்றத்திற்குமுன் ஆண்டு (காலம்) என்ற வரம்பு இன்றியிருந்தது. ம்ருத்யுவின் கருவில் பிரஜாபதி இருந்த காலமே ஆண்டு எனப்பட்டது. ப்ரஜாபதி தோன்றியதும், 'ம்ருத்யு' தனது இயல்பு கொண்டு, அந்தச் சிசுவை அழிக்க முற்பட்டது. அப்பொழுது அச்சமிகுதியால் பிரஜாபதி எனும் அந்தச் சிசு உரக்க ஒலித்தது. அவ்வொலியின் விளைவே 'சொல்' என்பதாம்.

சிசுவின் ஒலியைக்கேட்டு 'ம்ருத்யு' சிறிது சிந்திக்கலாயிற்று. "இச்சிசுவை உடனே அழித்து விடுவதால் சிறிதளவு உணவுதான் ஆகும் (பின்பு அழித்தற்கு ஒன்று மிராமல் வினையற்ற நிலை ஏற்படும்)" என்றுகருதி, மனோவாக்குகளின் இணைப்பு கொண்டு பிரஜாபதியின் வாயிலாக இவ்வுலகு அனைத்தையும் தோற்றுவித்தது. ரிக், 'யஜுஸ்' ஸாமம் என்ற மறைகளையும் சந்தங்களையும், வேள்விகளையும், மக்களையும், மாக்களையும் படைப்பித்தது. படைக்கப்பெற்ற எல்லாவற்றையும் 'ம்ருத்யு' அருந்த (அழிக்க) விரும்பியது அவ்வாறே எல்லாவற்றையும் அழித்து வருகின்றது. ஆகவே தான் 'ம்ருத்யு' 'அதிதி' (அருந்துவோன்) எனப்படுகிறது. இவ்வாறு உணர்ந்தோன் எதனையும் அருந்தும் வன்மைபெற்று, எல்லாம் இவனுக்கு உணவாகின்றது.

பிரஜாபதியும் அச்வமேதவேள்வியும்

மீண்டும் ஒரு பெரும் வேள்வியைச்செய்ய விருப்பங்கொண்டு, பிரஜாபதி தவத்திலிருந்தார். தவத்தால் களைப்புறவே தனது வன்மையும் குன்றியது. ப்ராணனே புகழுக்கும் வன்மைக்கும் காரணமாகும். அது நீங்கவே உடல் ஊதிப்பருத்துத் தூய்மையற்

றதாகியது. ஆயினும் அந்த உடலின்மீது மனதிற்குப்பற்று ஏற்பட்டது.

அப்பொழுது. இந்த ஊதிப்பருத்த உடல் வேள்விக்கு உரித்தாகுக என்று பிரஜாபதி, புகழும் வன்மையும் நீங்கிய உடலில் புகுந்தார். அது அச்வம் (குதிரை) ஆயிற்று. ஆகவே இந்த அச்வம் (குதிரை) பிரஜாபதி யெனத்துதிக்கப்படுகிறது. தான்புகுவதற்கு முன்பு வேள்விக்கு உரியதாகாமலிருந்து, பின்பு வேள்விக்கு உரியதாகி விட்டபடியால் குதிரையைக்கொண்டு செய்யப்படும் வேள்வி அச்வமேதமெனப்படுகின்றது. இவ்வாறு அறிகின்றவன் அச்வமேதத்தை அறிந்தோன் ஆவன்.

ம்ருத்யுவே எல்லாவற்றிற்கும் காரணம்

ஓராண்டு அக்குதிரையை, கட்டின்றி இருக்கச்செய்தார். பின்னர் பிரஜாபதி அதனைத்தனக்கே வேட்பித்துக்கொண்டு மற்ற விலங்குகளை மற்ற தேவதைகட்கு வேட்பிக்கச்செய்தார். ஆகவே அச்வமேத வேள்வியில் எல்லாத்தேவதைகட்கும் வேட்பித்துத்தூய அச்வத்தைப்ரஜாபதிக்குக் கொடுக்கின்றனர். [இதனால்,தன்னை அச்வமாகவும், மற்றவைகளைத்தனது உறுப்புகளாகவும் கருத வேண்டுமென்பதாம்.] உண்மையில் அச்வமேதமென்பது எங்கும்பிரகாசிக்கும் கதிரவனது வேள்வியேயாகும். ஆண்டு என்பதுஅவனது உடலாகும். (ஒருமுறை வானத்தை வட்டமிடுங்காலம் ஆண்டு என்று அறியப்படுதலின்) இப்புவியிலுள்ள அக்னியே 'அர்க்க' எனப்படுவது. இவ்வுலகங்கள் அவனது உறுப்புகள். ஆகவே, இவை (அக்னியும் ஆதித்யனும்) 'அர்க்க' என்பதும் 'அச்வமேதம்' என்பதுமாகும். இவை மீண்டும், 'ம்ருத்யு' எனும் ஒரேதேவதையாகிறது. இவ்வாறு ம்ருத்யுவே எல்லா மென்று அறிவோன் ம்ருத்யுவை வென்றவனாகின்றான். ம்ருத்யு அவனை அடைவதில்லை. ஏனெனில், இவன் தன்னை ம்ருத்யுவுடன் இணைத்துக்கொண்டு ம்ருத்யுவாக ஆகிவிடுகின்றான். அன்றி எல்லாத் தேவதைகளுடனும் ஒன்றுபட்டுவிடுகின்றான்.

இவ்வாறு 'ம்ருத்யுவே' எல்லாவற்றிற்குங் காரணமென்றும், ஆகவே பரம்பொருள் என்றும் கருதிஉபாஸனை செய்தலால் ஹிரண்யகர்ப்ப நிலையெனும் உருநிலை அடையப்பெறும்.

முயற்சி உடையவனிடத்து இலக்குமி உறைகின்றாள் ;

சோம்பல் உடையவனிடத்து மூதேவி உறைகின்றாள் ;

இன்பத்தை விரும்பாமலும், உலகில் துன்பம் உண்டாவது,

இயல்பென்று அறிந்தும் இருப்பவன் துன்பம் அடையமாட்டான்.

சர்க்கார் அறிக்கை புதுக் கல்வி திட்டம்

கல்வி மந்திரி ஸ்ரீ. ஸி. சுப்ரமண்யம் ஆரம்பக் கல்வித் திட்டம் பற்றி ஒரு அறிக்கை விடுத்தார். அவர் பேசியதாவது:—

சர்க்காரின் முடிவை அறிவிக்குமுன்னர் ஆரம்பக் கல்வித் துறையில் இந்தச் சட்டசபையும் அரசாங்கத்தையும், நாட்டையும் எதிர் நோக்கும் பிரச்னைகளை உங்கள் முன்பு எடுத்துரைப்பது அவசியமெனக் கருதுகிறேன். கடந்த காலத்தில் கல்வியானது ஒரு சில மக்களின் ஏகபோக உரிமையாயிருந்தது. ஜனத்தொகையில் மிகச்சிறிய சத விகிதத்தினருக்கே கல்வியும், பயிற்சியும் கிடைத்தது. ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. ஒரு சிலர்தான் கல்வி கற்பதன்பதற்குப் பதிலாகப் பலரும் கல்வி கற்க வேண்டுமென்ற மனோபாவம் ஏற்பட்டுள்ளது. இதனால் கல்விப் பிரச்னையின் கருத்தும், அளவும் அடியோடு மாறிவிட்டன.

புதிய பிரச்னை

இப்பிரச்னை முன்பு தனியார் முயற்சியால் சமாளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அதை அரசாங்கமும் அரசாங்க உதவியாலுமே சமாளிக்க முடியும். கல்வி பிரச்னையாது பொது அரசாங்க தேசிய பிரசனையாகப் பரிணமித்து விட்டது. இந்த மாறுதலை அநேக கல்வியாளர்கள் உணர்ந்து நடக்கத் தவறிவிடுகிறார்கள். தேசிய அளவில் கல்வி அளிப்பதென்றால் கல்வியின் இயல்பும், முறையும் அடியோடு மாறுவது அவசியம். சகலருக்கும் ஆரம்பக் கல்வியளிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்று அரசியல் சட்டம் ஆணையிடுகிறது. அந்த இலட்சியம் ஈடேற 10 வருஷம் கெடுவும் நிர்ணயித்துள்ளனர். எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கும் பிரச்னை ஏற்பட்டுள்ளது. அரசியல் சட்டத்தின் ஆணை ஒருபுறமிருக்கட்டும். பொது மக்களின் பிரதிநிதிகளாக இங்கு வீற்றுள்ள நமக்கு, நம் நாட்டுக் குழந்தைகள் அனைவருக்கும் மகத்தான கடமை உண்டு. சாத்தியமானால் இதைப் பத்து வருஷங்களில் செய்ய வேண்டும் என்பதும் கவனிக்கத்தக்கது. இந்தப்பிரச்னைக்கு இரண்டு முகங்கள் உள்ளன. முதலாவதாகப் பணவசதி, இரண்டாவது இதர வசதிகள். பண வசதி சம்பந்தப்பட்ட வரையில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும்.

சிந்திக்க வேண்டும்

ஆரம்பக் கல்விக்காக மட்டும் இந்தச் சர்க்கார் வருஷத்திற்கு நாலரை கோடி ரூபாய் செலவிடுகின்றனர். ஆரம்ப கல்விக்காக ஆகும் செலவில் இது 72.5 சதவிகிதம் ஆகிறது. 5 சதவிகிதம் தனிப்பட்டவர்களாலும், பாக்கி செலவு ஸ்தல ஸ்தாபனங்களாலும் செலவிடப்படுகிறது. ராஜ்யத்தில் ஆரம்பக் கல்விக்கு ஆகும் மொத்த செலவு சுமார் 6 கோடி ரூபாய். இத்தொகையைச் செலவிட்டு தமது முழந்தைகளில் பாதி பேருக்குக் கல்வி அளிக்கப்படுகிறது. மற்ற 50 சதவிகிதத்தினருக்கும் கல்வி வசதி அளிக்க வேண்டுமானால் அதனால் ஏற்படக் கூடிய பொருளாதாரப் பளுவைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியம். பள்ளிக்கூடங்களை அதிகரிப்பதன் மூலமும், அதிக ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமும் இதைச் செய்யலாம் என்ற அடிப்படையில் சென்றால் மேற்கொண்டு ஆறுகோடி ரூபாய் செலவிட வேண்டியிருக்கும். இச்செலவு தற்போதய சம்பள அடிப்படையில் ஆசிரியர்க

ளுக்குச் சம்பளம் அளிப்பதால் ஏற்படக்கூடிய செலவுகளும் உள்ளன. புதிதாக 23000 பள்ளிக்கூடங்கள் தேவை. அவற்றிற்கான கட்டிடங்கள் சாமான்கள் முதலிய தேவைகளையும் கணக்கிட்டால் சர்க்காரிடமிருந்து மேற்கொண்டு 10 அல்லது 12 கோடி ரூபாய் தேவையாயிருக்கிறது. பிரைவேட் ஸ்தாபனங்களின் பண உதவியை இதில் சேர்க்கவில்லை. இப்போதுள்ள நிலைமையில் இந்த பொருளாதாரப் பிரச்னையை நாம் சமாளிக்க முடியுமா என்பதை நமது ராஜ்யத்துக்கு ஏற்ற கல்வித் திட்டத்தை இறுதியாக வகுத்து அதை அனுஷ்டிக்கு முன்னர் இச்சபை சிந்திக்க வேண்டிய விஷயம். கல்வி வசதி விஸ்தரிப்பால் ஏற்படக்கூடிய செலவில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் கொடுப்பதற்குத் தேவையான செலவை நான் சேர்க்கவில்லை. இப்போது ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பள விகிதம் போதுமான தல்லவென்பதை ஒவ்வொரு அங்கத்தினரும் ஒப்புக்கொள்வர் என்பது நிச்சயம். எயிடட் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 3 சம்பள உயர்வு அளித்துள்ளதால் அரசாங்கத்துக்கு 19 லட்சம் ரூபாய் செலவு ஏற்படுகிறது. ஆகையால் ஆரம்ப ஆசிரியர்களுக்கு தாராள சம்பளம் இல்லாவிடினும் நியாயமான சம்பளம் அளிக்க வேண்டுமானால் ஏற்கெனவே குறிப்பிட்ட 12 கோடி ரூபாயைத் தவிரமேற்கொண்டு ரூ. 5 கோடி தேவையாயிருக்கும். இந்தப் பின்னணியில் தான் இந்தக் கல்வி பிரச்னையைக் கவனிக்க வேண்டும். பொருளாதார அம்சத்தைத் தவிர கல்வியின் இயல்பையும் கவனிக்க வேண்டும். எல்லா குழந்தைகளுக்கும் கல்வி அளிப்பது அவசியம் என்பதுடன் அவர்களுக்குச் சரியான ஒழுங்கான கல்வியளிக்க வேண்டியதும் முக்கியம். இந்த விஷயத்தில் 1952-53-ம் வருஷம் வரை அமுலிலிருந்த ஆரம்பக் கல்வி முறைக்கு அபிவிருத்தி தேவையாயிருந்ததென்பது பொதுவான கருத்து. ஆனால் அந்த மாறுதல் எப்படிச் செய்வது, என்ன மாறுதல் செய்வது என்பதில் கணிசமான அபிப்பிராய பேதம் இருந்தது. கல்விபற்றி பல விவரணைகள் செய்யப்பட்டன. ஆனால் சமூக அமைப்பில் கல்வியானது பெரியவர்கள் ஒப்புக் கொள்ளும் வழிகளில் பெரியோர் ஒப்புக்கொள்ளும் நோக்கங்களுக்காகக் குழந்தைகள் வளர கல்விப் பயிற்சியளிக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு தலைமுறையினருக்கும் நமது பண்பாட்டைப் புதிதாக ஊட்ட வேண்டும். பிறரைப் பார்த்து எவ்வளவோ கற்றுக் கொள்ளலாம். சமுதாய வாழ்வின் லட்சியமென்ன என்பது பற்றிய அபிப்ராய பேதங்களால் ஒரு கல்வி முறை வகுப்பது சிரம சாத்தியமான காரியமாகிவிட்டது. மேற்கத்திய கல்வி முறை கேவலம் உலகாயதத் தன்மையது என்று கூறப்படுகிறது. ஆனால் பெற்றோர்கள் தனிப்பட்ட விருப்பங்களைக் கவனித்தால் பிள்ளைகள் வளர வேண்டும். நன்றாகச் சம்பாதிக்க வேண்டும். அதிகாரம் வகிக்க வேண்டுமென்பதே அவர்கள் ஒவ்வொருவரின் ஆசை என்பது விளங்கும்.

ஆதாரக் கல்வியின் நோக்கமென்ன?

இதற்கு எதிராக வேறுவிதமான பொருளாதார தத்துவம் அடங்கிய ஆதாரக் கல்வியென்ற சீர்திருத்த முறையை மகாத்மா காந்தி வகுத்தார். ஆதாரக்கல்வியின் தரம் போதிய அளவு முன்னேற்றமடையவில்லை என்ற புகார் கூறுபவர்கள்

அந்தத் திட்டத்தில் அடங்கிய பொருளாதார லட்சியங்கள் சரியாக ஒப்புக் கொள்ளப்படவில்லை, புரிந்து கொள்ளப்படவில்லையென்றே கூறுகிறார்கள். இந்தக் குறுகிய அர்த்தத்தில் தான் ஆதாரக் கல்வி புரிந்துகொள்ளப்படுகிறது. பரந்த அர்த்தத்தில் கல்வி என்றால் ஆதாரப் பள்ளிகளில் உடலுழைப்பு அதாவது கைகால்களை உபயோகித்தல் மூலமாகக் பயிற்சி பெறும் பயன் என்று அர்த்தம் நம் ராஜ்யத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களையும் ஆதாரப் பள்ளிக்கூடங்களாக மாற்றுவதே நமது லட்சியமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த லட்சியத்தை அந்தரங்க சுத்தியுடன் சாங்கோபாங்கமாகச் சிக்கல்களின்றி அமுல் நடத்த நாம் விரும்புவதால் இதில் அபிவிருத்தி வேகமாக ஏற்படவில்லை. சரியான ஆதாரக் கல்வி முறை ஏற்படவேண்டுமானால் அதன் வேகம் மெதுவாய்த்தான் இருக்கும். அது மெதுவாய்த்தான் இருக்கிறது. மொத்தம் 22138 பள்ளிகளில் இதுவரை 720 பள்ளிகளைத்தான் ஆதாரப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறோம்.

பழைய முறையில் கேடு

ஆகையினால் கல்வி முறையில் வேறுஎந்த மார்க்கங்களில் மாறுதல்களைச் செய்யலாம் என்பதை ஆலோசிப்பது அவசியம். ஆதாரக் கல்வியே நமது இறுதி லட்சியம் என்று ஒப்புக் கொண்டுள்ளோம் இது ஈடேற அவகாசமாகும். எவ்வளவுதான் துரிதப் படுத்தினாலும் அதில் முன்னேற்றம் மெதுவாகத் தான் இருக்கும். 1935-ம் வருஷம் வரை அமுலிலிருந்த ஆரம்பக் கல்வி முறையை அப்படியே எவ்வித மாறுதலுமின்றி நீடிக்கவிட வேண்டுமா? அதைத்தவிர இரண்டு பிரதான கஷ்டங்களும் உள்ளன. மேற்கு நாடுகளைப்போலன்றி நமது தொழில் வளர்ச்சி குறைவு, ஊதியமுள்ள உத்தியோக வாய்ப்புகள் குறைவு. சில பெரிய பாக்டரிகள் நீங்கலாக பாக்கியுள்ள வேலைகளில் எல்லாம் குமாஸ்தாக்கள்தான். படித்த ஒவ்வொரு நபரும் குமாஸ்தா வேலையை நாடுகிறார். மற்ற வேலைகள் கிடைத்தாலும் அவற்றைச் செய்வது கவுரவக் குறைவு என்று கருதுகிறார்கள். இவ்வாறாகப் பழைய கல்வி முறையின் விளைவாக வருஷா வருஷம்வேலையற்றோர் தொகை அதிகரித்தது. இதற்கு முழுக்கமுழுக்க கல்வித்திட்டம் காரணமில்லாமலிருக்கலாம். வேலை அளிக்க எவ்வளவோ செய்ய வேண்டுமெனலாம். ஆயினும், கல்வியின் காரணமாக மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர் என்பதுண்மை. இரண்டாவதாக நமது மாணவர்கள் கற்றுக்கொள்ளும் சமூகப் பண்புகள், நற்பழக்கங்கள், பெரும்பாலும் கிராமங்கள் உள்ள நம் ராஜ்ய சமுதாய சூழ்நிலைக்கு இணக்கமாயிருக்கப் போதுமானவையல்ல என்று கூறப்படுகிறது. ஆகவே நாம் சகலருக்கும் கல்வியளிக்க வேண்டுமானால் அது வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கத் தக்கதாயிருக்க வேண்டும். அது வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கத் தக்கதாயிருக்கக் கூடாது.

எல்லோரும் கற்க வசதி தேவை

இவ்வாறாக ஆரம்பக் கல்வியை இரண்டு அம்சங்களில் கவனிக்க வேண்டும். முதலாவதாக எல்லாச்சிறுவர் சிறுமியர்களுக்கும் கல்வியளிக்க கல்வி வசதி விஸ்தரிக்கப் படவேண்டும். இரண்டாவதாகக் கல்வி முறை நமது மக்களின் வாழ்க்கையோடொட்டியதாய் இருக்க வேண்டும். கல்வி கற்ற பின்னர் குழந்தைகள் "வேறு உலகத்துக்கு" போய்விடுவ

தில்லை. சமுதாயத்திடம் சென்று அவர்களுடன் இணைந்து வாழ வேண்டும். அதற்கேற்ற உணர்வை அவர்களுக்கு ஊட்டும் விதத்தில் கல்வி முறை அமைய வேண்டும். சூழ்நிலை மாறும்போது கல்வியின் தத்துவமும் பயிற்சியும் மாறுதலடையும். ஆனால் பிரச்னையை உள்ளபடியே நாம் எதிர் நோக்க வேண்டும். நாம் சமுதாயத்திலிருந்து பிரிந்து வாழ முடியாது.

நமது குழந்தைகள் சென்று தனிச் சூழ்நிலையை அநுபவிப்பதற்காக பூலோகத்தில் சுவர்க்கத்தை நாம் சிருஷ்டித்துவிட முடியாது. இந்த பிரச்னையை தீர்க்கத்தான் நமது தேசப் பிதா ஆதாரக் கல்வி திட்டத்தை வகுத்தார். அதன் கருத்துக்கு ஏற்பதான் நாம் ஆரம்பக் கல்வி முறையில் மாறுதல் செய்ய வேண்டும். அதற்கான ஆரம்ப முயற்சியாகவே புதுக் கல்வி திட்டம் தயாரிக்கப்பட்டது.

ஷிப்டு முறையைத் தவிர்க்க முடியாது

ஷிப்டு முறையால் எல்லாக்குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கும் பிரச்னையைத் தீர்க்க அது முயன்றது. பள்ளிக்கூடமில்லாத நேர அலுவல் திட்டத்தால் அத்திட்டம் நமது குழந்தைகளுக்குப் புதுக் கருத்தையும் புதிய சூழ்நிலையையும் புதுப் பயிற்சியையும் மன விருப்பத்தையும் அளித்துள்ளது. அதன் லட்சியங்களை எப்படி ஈடேறச் செய்வது என்பது வேறு விஷயம். ஆனால் புதுக் கல்வி திட்டத்தின் லட்சியமதுவே. இதைப் புரிந்துகொண்டால் திட்டத்துக்கெதிரான தப்பபிப்பிராயங்கள், வெறுப்புகள் நீங்குமென்பது நிச்சயம். ஷிப்டு முறையை நாம் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும், நம் குழந்தைகளில் நூற்றுக்கு நூறு பேர்களுக்குக் கல்வி கற்பிக்க நாம் அந்தரங்க சுத்தியுடன் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமானால் ஷிப்டு முறையே பரிகாரம். இல்லாவிட்டால் இப்போது தெருக்களிலும் வயல்வெளிகளிலும் ஓடித் திரியும்குழந்தைகளில் பாதி பேர்கள் பள்ளிக்கூடம் செல்ல வசதியில்லாமல் தானிருக்கும். படிப்பில்லாமலிருக்கும் குழந்தைகள் வாழ்க்கையின் உயர் நிலையிலுள்ளவர்களின் குழந்தைகள் அல்ல. ஏழைகளின், தொழிலாளிகளின் ஹரிஜனங்களின் பிற்பட்ட வகுப்பினர்களின் குழந்தைகள் தான் படிப்பில்லாமல் தெருக்களில் வயல்வெளியில் ஓடித் திரிகின்றனர். பிற்பட்ட வகுப்பினர்களை கைதூக்கிவிட வேண்டுமென்று, பேசுகிறோம். இப்பிரச்னையைத் தீர்க்கப் போகிறோமா இல்லையா? எதாவது ஒரு கட்டத்தில் இந்த அம்சத்தை இச்சட்டசபை ஆலோசித்தாக வேண்டும். நாம் நமது பண வசதிகளையும் ஆசிரியர்கள் முதலியவர்களையும் கணக்கெடுத்துக் கொண்டால் எப்போதாவது ஷிப்டு முறையை ஒப்புக்கொண்டு தானாக வேண்டுமெனக் கருதுகிறேன்.

ஷிப்டு முறை முதன் முதலாக புதிய ஆரம்பக்கல்வித் திட்டத்தால் ஏற்பட்டதல்ல. நம் ராஜ்யத்திலும் அது முன்னதாகவே இருந்து வந்துள்ளது. பம்பாயில் இம்முறை முதல் இரண்டு வகுப்புகளுக்கு உள்ளது. முதல் 5 வகுப்புகளுக்கு இன்னும் உள்ளது

தொழில் மனப்பான்மை வேண்டாமா?

பள்ளி நேரங்களல்லாத மற்ற நேரங்கள் பற்றியே ரொம்பத் தப்பபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. 'இதர நேர' அலுவல் திட்டத்தை ஆரம்பித்தால் அது ஒன்றும் முறை தவறானதல்ல. குழந்தைகளுக்குத் தொழில் மனப்பான்மையையும் தொழில் விருப்பத்தையும் உண்

டாக்கும் பிரச்னையை இது தீர்க்க முயன்றுள்ளது. குழந்தைகள் உடலுழைப்பிலீடுபடச் செய்யலாமென்று கண்டிக்கப்பட்டது. ஆரம்பக் கட்டத்தில் குழந்தைகள் உடலுழைப்பிலீடுபட எதிர்பார்க்கப்படவில்லை. பிறர் வேலை செய்வதைப் பார்க்க வேண்டுமென்றே ஏற்பாடு செய்யப்பட்டது.

குழந்தைகளுடன் தொழிலாளிகள் கலந்து பழகும்படி அநுமதிப்பது குழந்தைகளைக் கெடுத்துவிடுமென்று கண்டிக்கப்பட்டது. சமுதாயத்திலிருந்து தனித்து வாழமுடியுமா என்றுதான் கேட்கிறேன். 5 மணி நேர படிப்பு முறை அமுலில் இருந்தபோது குழந்தைகள், வெளிச்சென்று ஆபாச, கெட்ட வார்த்தைகள் பேசும். அவர்களது பெற்றோர்களுடன் பழகவில்லையா? சமுதாயத்திடமிருந்து குழந்தைகளைப் பிரித்து வைக்கமுடியுமா?

தகப்பன் தொழிலில் ஈடுபட நிர்ப்பந்தமில்லை

வசதியுள்ள ஒரு சிலருக்கு மட்டும் கல்வி அளிப்பதென்றால் குரு குலத்துக்கோ சமுதாயத்திலிருந்து நெடுந் தூரத்திலுள்ள காட்டுக்கோ அனுப்பலாம். ஆனால் சர்வமக்களுக்கும் கல்வி கற்பிக்கும் தத்துவத்தை ஒப்புக்கொண்டுள்ள நாம் சமுதாயத்தைப் புறக்கணிக்க முடியாது ஆகவே தொழிலாளிகளுடன் குழந்தைகள் பழகுவதால் தீங்கு ஏற்படாதெனக் கருதப்பட்டது. அதற்கு மாறாக தொழிலாளிகளை அது சீர்படுத்தும். மற்றொரு ஆட்சேபம் தகப்பன் தொழிலையே மகன் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டதென்பது. இது பெரும் தப்பபிப்பிராயம் எவ்வளவோ தடவை சொல்லியும் துரதிருஷ்ட வசமாக இந்த தவறான கருத்து நீடித்து வருகிறது. இம்மாதிரி திட்டத்தில் கூறப்படவில்லையென்று எவ்வளவோ தடவை உறுதிமொழி அளித்தும் மக்கள் நம்புவதற்குத் தயாராயில்லை. பிராம்மணர்கள் போன்ற உயர்வகுப்பார் செருப்பு தைக்கும் தொழிலைக் கற்கலாம். அப்படிச் செய்தால் தொழில் அடிப்படையில் ஏற்பட்ட ஜாதி வித்யாசங்கள் நீங்கிவிடும். எந்த தொழிலுக்கும் இழுக்கு அல்லது அவமானம் கற்பிக்கப்படமாட்டாதென்பதே எனது நம்பிக்கை. தற்போது செருப்புத் தைக்கும் தொழிலை ஹரிஜனங்கள் தான் செய்யமுடியும். உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் எனப்படும் மக்களும் இத்தொழிலை செய்யும்படி செய்தால் இத்தொழிலுக்குள்ள அவமானம், இழுக்கு மறைந்தொழியும். ஜாதிகளை ஒழிக்க இதுதான் நிச்சயமான வழி, இதுதான் என் நம்பிக்கை.

திட்டத்தை பரீக்ஷிக்க அவகாசம் வேண்டாமா?

புதிய ஆரம்பக்கல்வி திட்டத்தின் நன்மைகள் பற்றி இப்போது பேசுவது அவசியமில்லை. ஜனநாயக அமைப்பில், எந்தத்திட்டமும் வெற்றி பெற பொதுஜன ஆதரவு அவசியம். இன்று புதிய ஆரம்பக்கல்வி திட்டம் வெற்றிபெறவில்லை என்றால் அதற்குக் காரணம் அத்திட்டம் தீமையானதென்பதல்ல. இதை நிச்சயமாகக் கூறமுடியும். திட்டத்துக்கு நியாயமான வாய்ப்பு அளிக்க தகுந்த சூழ்நிலை காணப்படவில்லை. வாய்ப்பு அளிக்காமலேயே அது மோசம் என்று தள்ளிவிடத்தயாராயிருந்தோம் என்று கூடச்சொல்லத்துணிகிறேன். உள்ளது உள்ளபடி நான் முடிவுசெய்யவேண்டியிருந்தது. திட்டத்துக்காக நாங்கள் எவ்வளவோ பிரசாரம் செய்தபோதிலும், அதை மக்கள் மொத்தத்தில் ஏற்கவில்லை. ஆனால் ஓரளவு ஆதரவிருந்தது. திட்டத்

துக்கு வெகுஜன ஆதரவு கிடைக்கும்படி செய்ய முடிந்ததென்று சொல்லத் தயாராயில்லை. எந்தத் திட்டத்துக்கும் ஜன ஆதரவு அவசியம், ஆகையால் தான் தீவிர ஆலோசனைக்கும் எனது கட்சியினரையும், மற்ற கட்சி தலைவர்களையும் கலந்தாலோசித்த பிறகு, புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தை கைவிடவும், அதற்கு முன்பு இருந்த பழைய கல்வித்திட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரவும் சர்க்கார் முடிவு செய்தனர். (எதிர் கட்சியினர் கரகோஷம்)

ஆனால் இத்துடன் பிரச்னை தீர்ந்துவிடவில்லை. ஏனென்றால் பழைய கல்விமுறையை அபிவிருத்தி செய்வதவசியம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். அதை மாற்றியமைத்தாகவேண்டும். அதை எப்படி மாற்றியமைப்பதென்பதை ஆலோசிக்கவேண்டும்.

சட்டசபை கலக்கப்படாத புகாருக்கு பதில்

இது சம்பந்தமாக, மற்றொரு குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கிறேன். சட்டசபையைக்கலந்தாலோசிக்காமல் அதுகொண்டு வரப்பட்டதென்று புகார் கூறப்பட்டது. கடந்த காலத்தில் செகண்டரி, கல்லூரிக்கல்விமுறையில் எவ்வளவோ தீவிரபுரட்சிகர மாறுதல்கள் சட்டசபையைக் கேளாமல் செய்யப்பட்டன. ஆகவே முந்திய மந்திரிசபை கல்வி விஷயமாக வழக்கத்துக்கு விரோதமான எதையும் செய்துவிடவில்லை. ஆனால் ஒரு திட்டத்தை கொண்டுவந்து விட்டால் அதை ஒப்புக்கொள்வதா இல்லையா என்றோ, அது நல்லதா கெட்டதா என்றோ கூற சட்டசபைக்கு உரிமையுண்டு. திட்டத்தை கண்டிக்கலாம். கல்வி முறை மாறுதல் பற்றிய சம்பிரதாயத்திலிருந்து முந்திய மந்திரிசபை பிறழவில்லை.

மாற்று யோசனைக் கூற கமிட்டி

பழைய கல்விமுறையை மாற்றியமைப்பதவசியமென்று கூறினேன். ஆரம்பக்கல்வியில் வெற்றிக்கு அவசியமான நல்ல மாறுதல்கள் ஏற்படவேண்டும். ஆரம்பக்கட்டத்தில் நல்ல முறையில் பயிற்சியளிக்காவிட்டால் நல்ல மனப்பாங்கும், சூழ்நிலையும் உண்டாக்கப் படாவிட்டால் செகண்டரி கட்டத்தில் அதைச் செய்வது சாத்யமல்ல. அதுவும் எல்லோருக்கும் கல்வி அளிக்கவேண்டு மென்கிற போது சரியான கல்வி முறை அவசியமாகிறது.

ஆகவே, ஆரம்பக்கல்வி பிரச்னையை பூராவாகப்பரிசிலனை செய்யயோசனைகள் சமர்ப்பிக்க ஒரு கமிட்டியை நியமிக்கவும், நிதானமான சூழ்நிலையில் அவற்றை விவாதித்து என்னென்ன மாறுதல்கள் செய்வதென்று முடிவு செய்யவும் சர்க்கார் தீர்மானித்துள்ளது.

சர்க்கார் நிலையை விளக்கினேன். சொந்த நிலையையும் விளக்க விரும்புகிறேன். காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் புதிய கல்வித்திட்டம் பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் வேற்றுமைகள் நிலவியபோதிலும் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் பொருட்டு புதிய கல்வித்திட்டத்தைக் கைவிடுவதென்றும் பழைய திட்டத்தை மீண்டும் கொண்டுவருவதென்றும், ஆரம்பக்கல்வி முறையை பரிசீலித்து அவசியமான மாறுதல்களைச் செய்வதென்றும் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நான் ஒரு கட்சியைச் சேர்ந்தவன். அக்கட்சியினால் தான் நான் மந்திரியாயிருக்கிறேன். நான் மந்திரியாயிருக்கும் வரையில் கட்சியின் கட்ட

வீண் குரோதம் வென்றது!

புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் கைவிடப்பட்டு விட்டது; இனி பழைய திட்டமே அமுலாகும்.புதியதிட்டத்தைக்கைவிட்ட காரணம் அது உதவாக்கரை என்பதல்ல; ஆனால் அதை முறைப்படி நிறைவேற்றுவதற்கு வேண்டிய சூழ்நிலை தற்போதில்லாததுதான். புதிய திட்டம் அடிப்படையிலேயே கோளாறுனதாயின், அதை நிராகரிப்பதில் நாமே முன்னின்றிருப்போம். இப்போதும் அது எவ்விதக் குறையுமற்றதென்று யாரும் சொல்ல முடியாது. ஆயினும் கல்வித் துறையில் நமது லட்சியங்கள் கூடியவரை எளிதில் ஈடேறுவதற்கான வாய்ப்புகள் பல அதில் உண்டு என்பதே நமது கருத்து.

நமது கல்வி முறை சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புள்ளதாக, அதன் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமைய வேண்டும்; அதே சமயத்தில் அது நமது இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையுடன் ஜீவனம் நடத்துவதற்கான உடல் உரத்தையும், உள்ளப் பாங்கையும்' ஊட்டுவதாயுமிருக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். இவ்வுணர்வுடன் அமைந்ததே நமது புதிய

ளைக்குக்கீழ்படியவேண்டியவன்.இந்த விஷயத்தில் கட்சி கட்டளைக்கு கீழ்ப்படியும் விஷயம் மட்டுமல்ல. மந்திரியாயுள்ளவரையில் அதற்குக் கீழ்ப்படிந்தே நடப்பேன்.

மந்திரியின் சொந்த நிலை விளக்கம்

புதிய ஆரம்பக்கல்வித் திட்டம் சம்பந்தப்பட்டவரையில் அதன் சாத்யானுகூலங்கள் பற்றி பெரு நம்பிக்கை கொண்டிருக்கிறேன். கல்வி பற்றி நான் செய்த எல்லாப் பிரசங்கங்களிலும் அத் திட்டத்தை வலியுறுத்தியிருக்கிறேன். இந்த மாறுதல் பற்றி முடிவுசெய்வது கட்சியின் கட்டளைப்படி நடப்பதா அல்லது வேறுவிதமாகச் செய்வதா என்று முடிவு செய்வது எனக்குக் கஷ்டமாயிருந்தது. கடந்த சில நாட்களாக நான் ஆத்மசோதனையிலீடுபட்டேன். சில இரவுகளில் தூக்கம்கூட வரவில்லை. இன்னமும் இருட்டில் தட்டுத்தடுமாறிக்கொண்டு தானிருக்கிறேன். ஞானோதயம் ஏற்படவில்லை. இது சொந்த பிரச்னையாயினும் சபையிடம் கூறுவது பொறுப்பெனக்கருதுகிறேன். சொந்த முறையில் நான் செய்யும் முடிவு தேச முன்னேற்றத்தை பாதிக்கக்கூடாது. நாம் சரியான வழியை வகுத்து கடைப்பிடிப்போம். கஷ்டங்களைக் கண்டு கலங்கமாட்டோம் என்பதே என்நம்பிக்கை. நல்லவழியை பின்பற்ற நமக்கு விவேகம் ஏற்பட வேண்டும். அதைப் பின்பற்ற தீரமும் விடாமுயற்சியும் ஏற்பட வேண்டும் என்பதே என் பிரார்த்தனை. எனது சொந்த நிலை யாதாயினும் சரி நான் எப்பதவி வகித்தாலும்சரி, நமது ராஜ்யம், மக்கள், குழந்தைகள் சரியான பாதையில் முன்னேற நான் மனப்பூர்வமாக ஒத்துழைக்க உறுதி கூறுகிறேன்.

கல்வித் திட்டம் மேலும் தற்போது, உள்ள வசதிகளைக் கொண்டு எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி அளிப்பதென்பது இத்தகைய ஒரு திட்டத்தின் மூலமே சாத்தியமாகும். பல்வேறு காரணங்களால் நமது ராஜ்யத்தில் இப்போது பாதிக் குழந்தைகளுக்குப் படிப்பில்லை. இவர்களில் மிக்கப் பெரும்பாலானவர்கள் பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்களே என்பது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். எனினும் இந்த அவகேட்டைக் கூடிய விரைவில் அகற்றக் கூடிய ஒரு திட்டத்தை அந்த வகுப்புகளின் நலத்தில் அக்கரை கொண்டவர்களெனச் சொல்லிக் கொள்வோரே எதிர்க்கக் கிளம்பியது துக்ககரமானது. இந்தத் திட்டத்தின் மூலம் செலவை அதிகரிக்காமல் தற்போதுள்ளதைப்போல் இருமடங்குக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க உடனே வகை செய்யலாம்; ஒரு வேளைப் பள்ளி, அதாவது நாளுக்கு மூன்று மணிப் படிப்பு நமது குழந்தைகளுக்குப் போதுமானது; மற்ற வேளையில் அவர்கள் ஏதாவது ஒரு தொழிலைச் செய்துதானாகவெண்டுமென்ற அவசியமில்லை; அதிலும் யாரும் தன் தந்தை தொழிலைக் கற்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் எள்ளளவும் கிடையாது; சிறுவர்களுக்கு இளம் வயதிலேயே எழுத்தறிவோடு, உடலுழைப்பிலும் கவனம் திரும்ப வேண்டும் என்பதே புதிய திட்டத்தின் அடிப்படையான கருத்து; காந்திஜியின் ஆதாரக் கல்வித் தத்துவத்துக்கு இத்திட்டம் முற்றிலும் ஒத்தது. இவ்விஷயங்களெல்லாம் எவ்வளவோ முறை, எவ்வளவோ விதமாகத் தெளிவுபடுத்தப் பட்டு வந்திருக்கின்றன. ஆனாலும் எதிர்ப்பாளர் எழுப்பிய எதிர்ப்புப் புயல் மேற்குறித்த உண்மைகளை மக்கள் நிதானமாகச் சிந்திக்க விடவில்லை.

புதுத் திட்டத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு அவ்வளவும் கண்மூடித்தனமான குரோதத்தின் விளைவு என்று நாம் சொல்லத் தயாராயில்லை. சித்த சுத்தியுடனே அத்திட்டத்திற்கு ஆட்சேபமுள்ளவர்களும் இருக்கக் கூடும் ஆனால் அத்தகைய ஆட்சேபங்கள் கலந்து பேசுவதன் மூலம் எளிதில் நீங்கக்கூடியவையே. உண்மையில் ஆட்சேபத்தில் சாரமுண்டானால் அதற்கு இடமில்லாதவாறு அத்திட்டத்தின் சில அம்சங்களைத் திருத்தியமைப்பதில் கஷ்டமில்லை. ஆனால் அத்திட்டத்தின் தராதர ஆராய்ச்சியைப் பற்றிக் கவலையின்றி அதை எப்படியாவது கவிழ்த்து விடவேண்டுமென்ற கட்சி ஓங்கிவிட்டது துக்ககரமானது. அதற்கு சர்க்கார் இணங்குவது ஒருவகையில் ஜனநாயகத்துக்கு ஒத்ததே. ஆனால் ஜனங்கள் கருத்தைப் பிரதிபலிப்பது மட்டுமின்றி, அவர்களை நேரான

(28-ம் பக்கம் பார்க்க)

திருப்பாவை - திருவெம்பாவை *

*இஃது, சென்ற (1953) ஆண்டு, ஜனவரி 10, 11-ம் நாட்களில் அம்பத்தூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற்கூடிய ''திருப்பாவை - திருவெம்பாவை'' மகா நாட்டில், சென்னை தியாகராய நகர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஹைஸ்கூல் ஆசிரியர், ஸ்ரீமான் திரு. ரா. கோவிந்தராஜ ஐயர், B.A.L.T. நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

7. பாசுரங்களில் பேசப்படும் பொருள்

திருவண்ணாமலையில் பேரொளிப் பிழம்பாய் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை, முதலும் முடிவும் இல்லாத முழுமுதற்கடவுளை, வைகறையிற்றுயிலெழுந்து மகளிர், மனமார வாழ்த்துகின்றனர், வாயார வழுத்துகின்றனர். இவர்களது வழுத்தும் பாட்டுக்களைக் கேட்டும் ஒருத்தி துயிலெழாது படுக்கையிற் கிடந்தாள். அவளை நோக்கி, அவர்கள் கூறுகிறார்கள், “ஒளி பொருந்திய நீண்ட கண்களையுடைய எம் தோழி! இன்னும் துயில்கின்றனையே? நின்கண்கள் என்ன கண்கள்? நின் செவியும் வன் செவியோ? புன் செவியோ? மற்றென் செவியோ? அறிகிலேம். நின்செவி, நன்செவியாயின் இவ்வின்னிசை அதனுட் புக்கிருத்தல் வேண்டுமே? நின்செயல் இவ்வாறிருக்க, மற்றொருத்தியின் சீரிய செயலைக்கேள். நம்பெருமானது திருநாமத்தைக் கேட்ட அளவிலே விம்மி விம்மியழுது, மெய்மறந்து தன் மலர்ப்படுக்கையிலிருந்து கீழேவிழுந்து புரண்டு தன்னுணர்வு அற்றுக்கிடக்கின்றாள். அவள் நிலை எங்கே? நின்நிலை எங்கே? என்னே நின் மடமை? கொன்னே கழித்தனை நின்காலத்தை” என எடுத்துரைத்து அவளைத் துயிலெழுப்புகிறார்கள்.

துயிலெழுந்த மகளிர், எழுதல் செய்யாத ஒருத்தியை விளித்துக் கூறுவர், ‘‘என்றென்றும் நம் பரஞ்சோதிப் பெருமான் திருவடிக்கே பாசம் வைத்த நேரிழையன்றோ நீ? இன்று இன்னும் நின் மலர் நிறைந்த படுக்கையினை விடுக்குங் கருத்திலைபோலும்! அத்துணை யுளது நினக்கு நின் படுக்கைமாட்டு நேசம்; நன்று, நன்று!’’ அப்போதும் துயிலினைத் துறவாத அவள் கூறுவாள், “ சீ, சீ! விளையாட்டாக வைவதற்கு இதுவோ வேளை, இலையோ நுங்கட்கு வெறொன்றும் வேலை? நீங்கள் கூறும் நகை மொழிகளில் இவை சிலவே போதும்’’. மற்றவர்கள் மறுமொழி யுரைப்பர், “வெகுளாதே, தூக்கக் கலக்கத்திற் குழறாதே. வானோர்க்கும் அரிய திருவடிகளை நமக்குத் தந்தருள்வான் தில்லையம்பலக் கூத்தன் வந்தருளியுள்ளான். நாம் அதனை அறியவேண்டாவோ? நாம் யார்? அவன் சிற்றடியேம் அல்லேமோ?” எனக்கூறி அறிவுறுத்துவர்.

நீராடச் சென்ற மாதரெல்லாம் தம் தோழி ஒருத்தியை நோக்கி, “முத்தினை ஒத்த வெண்மையான பற்களையுடைய பாவாய்! முன்பெல்லாம், ‘‘அத்தன் ஆனந்தன் அமுதன்’’ என இறைவன் மாட்டு அத்துணை அன்பு

காட்டி வந்தனையே? இப்போது என் இத்துணைத் தூக்கம்? இன்னும் என் வாயிற்கதவைத் திறவாது வாளா இருக்கின்றாய்?" என்றனர். என்றலும், அவள் கூறுவாள், 'ஆமாம், நீவிர் எல்லாம் பழைய தொண்டர்கள், மிக்க உரிமையுடையவர்கள், நான் என்ன புதிய அடியவள் தானே? எனது சிறுமையைப் பொறுத்துக்கொண்டு அருளுதல் உங்களுக்குப் பொருந்தாதோ?'' என, எழுப்பவந்த அம் மகளிர் கூறுவர், "நின் அன்பு பொய்ம்மையுடையதன்று; நின் அன்பின் தன்மை எங்கட்குத் தெரியாதது அன்று; ஆனல், நம் சிவபெருமானிடத்துச் சீரிய அன்புடையவராய்த் தூய உள்ளம் படைத்தவர்கள் அவனைப் பாடாதிருப்பரோ! ஆதலின் நின் தூக்கத்தைப் போக்கி நீயும் உடன் பாடவேண்டும் என்பதே எங்கள் கருத்து, இனி, முனியாதே"

பல மாதர் ஒருத்தியை நோக்கி, "ஒளிவீசுகின்ற முத்துப்போன்ற பல்லினையுடைய நல்லாய்! இன்னும் நினக்கு மட்டும் பொழுது விடியவில்லை போலும்?" என வினவினர். அதற்கு அவள், "இருக்கட்டும், அழகிய கிளிபோன்ற மொழிகளை வல்ல எல்லோரும் வந்து விட்டார்களா? கூறுமின். "எனக்கேட்க, அவர்கள், "சரி, சரி, வந்துள்ளவர்களைக் கணக்கிட்டு உள்ளபடியே உரைக்கின்றோம். அதுவரையும் கண்மூடித்தனமாய், காலத்தை வறிதே கழிக்காதே, நம் கண்களுக்கு இனிய காட்சியைத்தரும் இறைவனை, வேதங்களாற் கூறப்படும் விழுப்பொருளை, தேவாதி தேவனை வழிபட்டுய்ய இதுவே தக்கபருவம். வந்திருப்போரை நாங்கள் எண்ணமாட்டோம், வேண்டுமானல் நீயே வந்து எண்ணிக்கண்டுகொள். கணக்கில் ஒன்றுங் குறையுமானல் பிணக்கின்றி பின்னும்போய் துயில்கொள்" எனக்கனிவும் துனிவுந் தோன்றக்கிளந்தனர்.

தோழியர் பலரும், மயிர்ச்சாந்தணிந்த கூந்தலுடையாள் ஒருத்தியை நண்ணி விளிப்பார், "ஏலக் குழலினய்! நின் சீலத்தை எவ்வாறு சிறப்பித்துக் கூறுவோம்? நீ கூறுவன வெல்லாம் பொய்யே. திருமாலும் பன்றியாச் சென்றுணராத திருவடியையும். அயனும் அன்னப்பறவையாகச் சென்றுங் காணமுடியாத திருமுடியையும் உடைய நெடிய திருமேனியனுகிய சிவபெருமானை நாமெல்லாம் எளிதிலே அறியக்கூடும், என எண்ணும் வண்ணம், பாலொடு தேன் கலந்தாற்போன்ற இனியவுரைகளை வழங்கும் வஞ்சகவனிதையன்றோ நீ? இன்னமும் வாயிற்கதவினையுந் திறந்திலை. இம்மண்ணுலகத்தவரும் அவ்விண்ணுலகத்தவரும் மற்றெவ்வுலகத்தவரும் அறிவதற்கு அருமையான நம்பெருமானின் திருவடிவத் திறத்தையும், சிறியோமை அடிமையாகக் கொண்டு குன்றேயனைய நங்குற்றங்களையும் குணமாகக் கொண்டருளும் அவன் பெற்றியையும் பற்றிப் பலதிறப்படப் பாடி, சிவபெருமானே! சிவபெருமானே! என அரற்றிய எம் பேரொலியைக் கேட்டும் ஒன்றும் உணர்ந்திலை போன்றுளாய்; துயிலினையும் இன்னும் துறந்திலை. என்னே நின பெருமை!"

எத்தனை விதங்கள்தான் கற்கினுங் கேட்கினும் சித்தந் தெளியாமல் வித்தகம் பேசிப் பேருறக்கங் கொண்டிருப்பாள் ஒரு பேதை. அவளை, "மானே!" என நயம்பட விளித்துச்சில விளம்புவார் மெய்யன்பு சான்ற நங்கையர். "நன்று, நேற்று நீயாது கூறினுய்? 'நீவிர் வருந்த வேண்டா; நாளை நானே வந்து உங்களைத் துயிலுணர்த்துவேன், குறிக்கொண்மின்' என்றனையே? அதனை இன்று மறந்தனை போலும்? அவ்வாறு நீ சொன்ன

சொல் எவ்வாறு எங்கு பறந்து சென்றுவிட்டது? நினக்குச் சிறிதும் நாண மில்லையோ? சொன்ன சொல் தவறுதல் அறமாமோ? அன்றி, நின்கருத்தில் இன்னும் பொழுது விடியவில்லையோ? வானவர்க்கும் நிலத்தவர்க்கும் மற்றும் யார்க்குந் தெரியாத தத்துவனாகிய சிவபெருமான் தனது தடப் பெருங் கருணையினால் தானே வலியவந்து எமக்குப் பேரருளைச்செய்தான். அத்தகையான் திருவடியைப் போற்றிப் புகழ்ந்து பாடி வருகின்ற எங்கட்கு நின் வாய்திறந்து ஒன்றுங்கூறாது உறங்குகின்றாயே! நின் வாயிலையுந் திறந்திலை. நின்னுடம்பு உருகப்பெற்றிலை; நின் செய்கை நினக்கே பொருந்தும். உருகிப் பெருகி உளங்குளிர, பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலை முகந்துகொண்டு அருந்தி, எமக்கும் ஏனோர்க்கும் இறைவனாகிய சிவபெருமான் திருவடியைப் பணிந்து பாடுவோமாக.''

"தாயே! நினது விளையாடல்கள் பலவற்றுள் இவையும் சில போலும்! தேவர்கள் எவரும் எண்ணி எய்துதற்கு அரியவனும் ஒப்புயர்வு இல்லாதவனும், பெரும்புகழுடையானுமாகிய எம்பெருமானுடைய சங்கு முதலிய ஒலிகளைக் கேட்டலுமே "சிவா, சிவா!'' எனவாய் ஓயாமற் சொல்லுவையே. "தென்னாடுடைய சிவனே போற்றி'' எனத்தொடங்கும் முன்னமேயும் தழலில் இட்ட மெழுகுபோல் உள்ளம் உருகுவாயே! கண்ணீரை வெள்ளமாய்ப்பெருக்குவாயே! அத்தகைய நீ இன்று எத்தகையளாய் இருக்கின்றாய்? நாங்கள் யாவரும் தனித்தனியே, "எனது இனிய இறைவன், எனது அரசன், எனக்கு இன்னமுதானவன்'' என்று எடுத்து இயம்பினோம். இயம்பிப் பயனென்ன? இன்னமும் தூங்கிக்கொண்டே யிருப்பையோ? அன்பு என்பது சிறிதும் இல்லாத கன்னெஞ்சக் கடையர் போலச் சும்மா படுத்திருக்கின்றாயே! தூக்கத்தின் சிறப்பைத்தான் என்னென்று கூறுவது? எனக் கூறித் துயில்கின்றாளை உணர்த்துவர்.

பின்னும் உறங்குகின்றாள் ஒருத்தியைப் பொருட்படுத்திக் கூறுவார் துயிலுணர்ந்த நங்கையர் எல்லாம். "அம்மா தோழி! கூவிற்று கோழியும்; பிற பறவைகளுந் துயிலைத்துறந்து தத்தம் ஒலிகளை எழுப்புகின்றன. ஒளியாலும் அளியாலும் ஒப்பிலாத நம் இறைவனைத் திப்பிய மொழிகளாற் பாடினோம். அவற்றை நீ கேட்கவில்லையோ? நீ நன்றாக வாழ்வாய்; இது எத்தன்மையான தூக்கமோ, ஒன்றும் விளங்கவில்லை. வாய்கூடத் திறக்க மாட்டேன் என்கிறாயே! நமக்கெல்லாம் அரசனாய் இருப்போனிடத்து அன்புடைமையை அறிவிக்கும் திறமும் நெறியும் இவையே போலும்! கற்ப காலங்களுக்கு எல்லையாய், காலத்தைக் கடந்த நம் தலைவன் ஒருவனையே, உமை யம்மையாரை ஒரு பாகத்தில் உடைய பெருந்தகையானையே போற்றிப் பாடுவோமாக''

பின்னர் நங்கைமார் அனைவரும் ஒருங்கே இறைவனை நோக்கி ஒன்று வேண்டுவர். "பழமையான பொருள்களுக்கெல்லாம் பழமையான பொருளாய் விளங்கும் பெற்றியனே! புதுப்பொருள்களுக் கெல்லாம் புதுப்பொருளாய்த்துலங்கும் பொற்புடையவனே! நின்னடியாரையே யாம் மணந்து அவர்க்கே ஆட்செய்ய வேண்டுகின்றோம். எங்கள் கைகள் நினக்கே பணி செய்ய வேண்டும். எங்கள் கண்கள் நின்னையே அல்லும் பகலும் எப்போதும் காணவேண்டும். எமது இச்சிறு விருப்பத்தை நல்குவையானால் யாம் ஒரு குறையும் இலோமாய் இருப்போம். பின், கிழக்கே எழும் ஞாயிறு எங்கே எழினும் எமக்கொரு கேடும் கவலையும் இல்லை.''

"ஆதியும் அந்தமும் அற்றவன். அடியும் முடியும் அறிய ஒண்ணாத பேருருவத்தான். வேதங்களாலும், விண்ணவராலும், மண்ணகத்தவராலும் புகழ்ந்து போற்றற்கு அரியான். எனினும் அவ்வேதியன், அடியார் அகத்தே விளங்கும் அருட்பெருஞ் சோதியன். ஓருரும், ஒருபேரும் உற்றவரும் அயலாரும் என்ற இத்தொடக்கத்தன ஒன்றும் இல்லாதவன் எங்கள் சிவ பெருமான். அண்டங்கள் அனைத்தையும் ஆக்கி, அளித்து அழிக்கும் ஆற்ற லுடையான். ஆணாகிப் பெண்ணாகி அலியாகி, விண்ணாகி மண்ணாகி இத்தனையும் அல்லாதானாகி, கண்ணார் அமுதமாய் நின்றான் எங்கள் இறைவன். இத்தகைய எம் சிவபெருமான் திருக்கழல்களை வாயார நாம் பாடி, மலர்கள் பலவாலும் நிறைந்து, நம் இறைவனையும் இறைவியையும் போன்றிருக்கின்ற இப்பொய்கையில் புக்கு, 'முகேர்' என்னும் ஒலி எழும்படி யாக நீரினைக்கையால் இறைத்து, காதுகளில் அணிந்துள்ள தோடுகள் ஆடவும், உடம்பின் ஏனைய உறுப்புக்களில் அணிந்துள்ள ஆபரணங்கள் ஆடவும், கூந்தலில் உள்ள மலர் மாலைகள் ஆடவும், அம்மாலைகளைச் சுற்றும் வண்டின் இனங்கள் ஆடவும், வைகறைப்போதில், புதிய இனிய குளிர்ச்சி யான நீருள் முழுகிப் பன்முறை நீராடி, திருச்சிற்றம்பலத்தைப் பாடி, வேதப் பொருளால் விளங்கும் விமலன் விரைமலரைப் பாடி, அவனே ஆதியான முறையையும், இவனே அந்தமான முறையையும் பாடி உய்வோமாக" என ஆடிப்பாடி நீராடி இன்புற்றனர் இளநங்கையர் எல்லாம்.

பின், இறுதிப் பாசுரத்தில்,

"போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்;
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்;
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்;
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்;
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்;
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்;
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்;
போற்றியா மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்."

என இறைவன் திருவருளை வேட்டு, அவன் திருவடி மலரைப் பணிந்து வணங்கி வாழ்த்தி மகிழ்ந்து நிற்பர் மகளிரெல்லாம்.

(8) திருப்பாவை—திருவெம்பாவை ஒப்புமைப் பகுதிகள்

திருவெம்பாவை திருப்பாவை என்ற அருளிச் செயல்களை ஆராய் வார்க்கு, இவை இரண்டும் சொல்லாலும் பொருளாலும் எத்துணை ஒத்துத் திகழ்கின்றன என்பது தெற்றெனப் புலப்படும். அவற்றுட் சில பகுதிகள் ஈண்டுத் தரப்படுகின்றன. இதனால், எவர் எவருக்கு முற்பட்டவர், எவர் எவருடைய கருத்துக்களையும் சொற்களையும் மேற்கொண்டுள்ளார் என்பன போன்ற பயனில்லாத செயலைச் செய்யுங் கருத்து எமக்கில்லை. பேருள்ளம் பெற்ற பெரியோர்கள், ஆண்டவனின் அடியார்கள் யாண்டேயிருப்பினும் எக்காலத்தே உறைதரினும் இயல்பாகவே ஒத்த கருத்துக்களை உடையவர் ஆவரென்பதும், அக்கருத்துக்களுக்கேற்ப அவர் தம் சொற்கள் எழாநிற்கும் என்பதும் எம்முடைய துணிபு. அன்றி, பின்வந்தவர் (எச்சமயத்தவரே யாயினும் எக்கொள்கையினரே ஆயினும்) முன்னிருந்தவரின் கருத்துக் களையும் சொற்களையும் ஏற்றுத் தம் கொள்கைகளுக்கு இணங்க, தம் பாசுரங்

களில் அமைத்துக்கொள்வது இழுக்குடையது என்றேனும் வழுவுடைத் தென்றேனும் அறிவுடையார் எவருங் கருதார். அன்றியும், "அவரவர் தாமே அவற்றைக் கூறிப்போந்தார்" எனக் கூறுவதனாலேயே, அவ்வவர்க்கு ஏற்றங் கற்பிக்க முயல்வது உண்மைக்குப் புறம்பாகும் என்பதையும் அவர்க்கு மெய்யான மேன்மையினை நல்காது என்பதையும், ஆண்டவன் அருட்டிறத்தை அறிந்து ஆயும் அறிஞர் அனைவரும் அறிவர். ("முன்னோர் மொழி பொருளே யன்றி அவர்மொழியும்—பொன்னே போல்" போற்றிக் கொள்ளுதல் புன்மையுடையது அன்று என ஆங்கில அறிஞருங் கூறுப. "To borrow and better in borrowing is no plagiarism".)

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம் **பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
(1) **மாதே வளருதியோ?**" என்ற திருவெம்பாவை முதற்
பாசுரப்பகுதி,
"நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப் **பாடவும் நீகேட்டே கிடத்தியோ?**" எனவரும்
ஆண்டாள் அருண்மொழியோடு ஒப்பிடற்கு உரியது.
"கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
(2) ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்" எனத்
திருவெம்பாவையும்
"புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?" எனத்

திருப்பாவையும் வைகறையில் பறவைகள் (கோழி, குருகு) ஒலித்தல், திருப்பள்ளி யெழுச்சியின் பொருட்டுத் திருக்கோயில்களில் வெண்சங்கம் முழக்குதல் என்ற ஒருபொருளையே ஒத்த சொற்களாலே உரைத்தல் உணரற் பாலது.

"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
(3) வாழி, ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்" என
வாதவூர் அடிகளும்,
"மனத்துக் கினியானைப் பாடவும் நீவாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய், ஈதென்ன பேருறக்கம்?" என
சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாரும் கூறினர்.
"ஒண்ணித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம், அவ்வளவும்,
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே;
(4) விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம். நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்"
என்ற மணிவாசகப் பெருமானின், கருத்து, சொல்,
சொல்லுந்திறம் என்ற இவற்றோடு,

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்.
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்;
வலவீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக;
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை?
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந் தெண்ணிக்கொள்;
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோர் எம்பாவாய்" என்ற

பாவை பாடியருளிய பல்வளையார் கோதைப் பிராட்டியாரின் கொழுஞ் சொற்களையும் வைத்து எண்ணுவோமாக.

"மானே! நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன், என்றலும் நாணமே
யோன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?"
—திருவெம்பாவை 6-ம் பாட்டு

(5)

"எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்"
—திருப்பாவை 14-ம் பாட்டு

இவற்றை வாசிப்பவர்க்கு, இவற்றிடையே சொல்லாலும் பொருளாலும் வாசியின்மை இனிது புலப்படுமன்றோ?

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
(6) என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்"

என ஆளுடைய அடிகள் திருவாய் மலர்ந்தருளினார்.

"ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்" என

ஆண்டாள் அம்மையாரும் அருளிச்செய்தார்.

"வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று" —(திருக்குறள்-வான்சிறப்பு)

ஆதலின், இவ்விரு பெருந்தகையாரும், உலகின் நன்மையின் பொருட்டு மழையை விழைந்தனர். இவ்விருவரும், தத்தம் மதம், மரபு மனப்பான்மை என்ற இவற்றிற்கு இணங்க, மழையின் உருவம், மின்னல், முழக்கம், பொழியுந்தன்மை என்பனவற்றைத் தெய்வ அருட்சுவையும்

இலக்கியப்பொருட்சுவையும் இனிதுற புலப்படத்தம் சொன்மழையாகிய கன் மழையைப்பொழிந்து நம்மை இன்புறுத்தியுள்ளனர்.

இங்ஙனமாக, தொடக்கத்தில், இம்மைப்பயன்களைக்கருதி, இளங்கன்னியர் மேற்கொண்டு நோற்ற இம் மார்கழிநோன்பு, பின்பு, அடியார்களால் இம்மையோடு மறுமைப்பயனையுங் கருதி,இறைவனையே குறித்துப்பாடப்பட்ட மேம்பாட்டினை எய்திற்று. இற்றை நாளில், மார்கழித் திங்களில், சைவ-வைஷ்ணவப் பெருமக்கள், வைகறையில் நீராடி இத் திருவெம்பாவை-திருப்பாவைப்பாசுரங்களை நாடோறும் ஒதி வழிபட்டு வருகின்றனர். இத்திருநூல்களை தினந்தோறும் தூயோமாய் இருந்து சேவித்தோமாயின், "போய பிழையும் புகுதருவான் நின்றனவும்-தீயினில் தூசாகும்" என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

(9) முடிவுரை.

இதுகாறும் யான் கூறியவற்றாற் பெற்ற பொருள் இது. பொக்கமும் பொய்யும் பேசி வறிதே பொழுதினைப் போக்கும் மக்களை, அஞ்ஞானம் என்னும் கனையிருளில் உறங்கிக் கிடக்கும் ஆத்மாக்களை, ஆசாரியன் தனது தடப்பெருங் கருணையால் துயிலெழுப்பி, அவர்கள் செல்லவேண்டிய தூயநெறியை-பக்தி, வைராக்கியம், ஞானம் என்ற நெறியை-அறிவித்து அருள்கின்றான்.

"மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றார்

தாயுமான அடிகள். உபநிஷத்துக்களும், "ஆசார்யவான் புருஷோவேத" என உபதேசிக்கும். எனவே, நாமெல்லாம் ஆசார்யன் அநுக்ரஹத்தால் அஞ்ஞானம் அழிய மெய்ஞ்ஞானம் செழியப் பெற்று ஆண்டவன் திருவருளை எய்தியுய்வோமாக.

"மல்குக வேத வேள்வி வழங்கு சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க."

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

ஓம். சாந்தி: சாந்தி: சாந்தி:

(21-ம் பக்கத் தொடர்ச்சி)

வழியில் நடத்திச் செல்வதும் ஒரு ஜனநாயக சர்க்காரின் கடமை. இதில் கருத்தில்லையாயின் அவ்வப்போது வீசும் எதிர்ப்பிரசாரப் புயலில் சிக்கி உருப்படியான காரியம் ஒன்றும் செய்யாமல் அலைபட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான். எப்படியும் பழைய ஆரம்பக் கல்வி முறையைத் திருத்துவது அவசியமென்ற உணர்வுடன் அதைப் பற்றி ஆராய்ந்தறிவிக்க ஒரு கமிட்டி நியமிப்பதென்ற சர்க்கார் யோசனையை சட்டசபை ஒப்புக் கொண்டது இதற்கிடையில் ஏற்கெனவே அமுலில் இருந்த பழைய கல்வி முறையே ஜூன் முதல் அமுலில் வரும்.

குறுகிய திருஷ்டி வேண்டாம்

நம்மில் முதல்தரமான கல்வியாளருக்குக் குறைவில்லை. நம் சமுதாயத்துக்கேற்ற ஒரு கல்வி முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் யோசனை சொல்லக்கூடிய மற்ற மேதாவிகளுக்கும் பஞ்சமில்லை. ஆனாலும் இன்றளவும் நமக்கு உகந்த ஒரு கல்வித்திட்டம் உருவாகக்காணோம், பழைய கல்வி முறையின் பயனற்ற தன்மையை வரவர ஆத்திரத்துடன் கண்டிப்பதிலேயே பொழுது போகிறது. இந்த அவகேடான நிலைமைக்குக் காரணங்கள் பல வாருகக் கூறலாம். அவற்றில் அரசியல் கண்ணேட்டத்துடன் ஒரு சாரார் இப்பிரச்னையில் குறுக்கிட்டு வருவதும் ஒன்று. தங்களுடைய குறுகிய வெற்றி– தோல்வி பற்றியே அவர்களுக்குக் கவலையெல்லாம். தங்கள் விஷமத்தால் கோடிக்கணக்கான குழந்தைகளின் எதிர்காலம் என்னுகும் என்பதைப் பற்றி அவர்கள் சிறிது யோசிப்பாராயின், அவர்கள் நெஞ்சு திடுக்கிடும். ஆனல் அவ்விஷயத்தில் அவர்கள் தம் கவனத்தைத் திருப்பத் தயாராயில்லை.

நமது கல்வி தொழிற் பயிற்சியுடன் கூடியதாக அமையவேண்டுமென்பதை யாரும் மறுக்கவில்லை. ராஜ்யக் கல்வி மகாநாட்டில் பேசிய அனைவரும் இவ்வுண்மையை வலியுறுத்தியிருக்கின்றனர். உயர்தரப் படிப்பு கட்டத்தை அடைந்த பின், திடீரென்று உடலுழைப்பில் மோகம் உண்டாகி விடமுடியாது; எனவே சிறுவர்களுக்கு ஆரம்ப கட்டத்திலிருந்தே ஏதாவது ஒரு தொழிலில் சிரத்தை ஏற்படச் செய்யவேண்டும் என்பதிலும் கருத்துவேறுபாடில்லை. ஆனல் அத்தகைய சிரத்தை எவ்வாறு உண்டாக்குவது? பள்ளிக்கூட நேரத்தில் பள்ளி ஆசிரியர்களைக் கொண்டே அக்காரியத்தை நடத்தி வைக்க முடியுமா; இதுவரை நமக்கு இத்துறையில் ஏற்பட்டுள்ள அனுபவம் உணர்த்துவது என்ன என்பவை போன்ற விஷயங்களைப் பலர் நிதானமாகச் சிந்திக்கத் தயாராயில்லை. சிலர் வேண்டுமென்றே இதில் மக்கள் மனத்தைக் குழப்பும் வேலையில் தீவிரமாக முனைந்திருக்கின்றனர். இப்பிரச்சனையைக் குறித்து ஆலோசிக்கையில், எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளிப்பது பற்றி நமது அரசியல் சட்டத்திலுள்ள ஷரத்தும் நினைவிருக்க வேண்டும். தற்போது எழுத்தறிவுள்ளோர் 17–சத விகிதம். இன்னும் 7 வருஷத்துக்குள் இதை சுமார் ஆறு மடங்காகச் செய்வது, தற்போது நமக்குள்ள பண வசதி, பள்ளிக்கூட இட வசதி, ஆசிரியர்கள் பற்றுக்குறை இவற்றைக் கவனிக்குமிடத்து எந்த அளவு சாத்தியம்? ஆரம்பக் கல்வி முறைத் திருத்தம் பற்றி சென்னை சர்கார் நியமிக்க விருக்கும் கமிட்டி இதை யெல்லாம் நினைவில் கொண்டு தனது பொறுப்பை நிறைவேற்றிவைக்குமென்று எண்ணுகிறோம்.

(நான்காம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளில் வகிக்க இந்த அனுபவத்தைப் பெறலாம். தென்னிந்தியாவில் இதற்கு ஒருபள்ளியோ, கல்லூரியோ இல்லை.

இதுபோன்ற வருடாந்திர மகாநாடுகள் நடைபெறுவது அவசியம். கடந்தகால சாதனை பற்றி பரிசீலனை செய்து வருங்காலத்திட்டம் பற்றியும் யோசிக்க இம்மகாநாடுகள் உதவும். நான் எனக்குத் தோன்றிய சில யோசனைகளைத் தெரிவித்துள்ளேன். நமது கல்வியாளர் கூறுவதையும் கேட்டு முடிவு செய்ய சிந்தித்து, பாரபட்சமின்றி முடிவு செய்யவும், விவேகத்துடன் திட்ட மிடவும், போதிய திறமையைப் பெறுவோமாக.

ஸெகண்டரி கல்வியைப் பற்றிய வரை, அதுபற்றி ஆராய்ந்த கமிஷனின் யோசனைகள் பொதுவாக ஏற்கத்தக்கவையே, 14 வயதோடு சாதாரணக் கல்விக் கட்டத்தைப் பூர்த்தி செய்யும் இளைஞர்கள் மேற்கொண்டு தங்கள் திறனுக்குத் தக்கவாறு பல வகைத் தொழில் பயிற்சி பெற வசதி இருக்கவேண்டுமென்பது அச்சிபார்சுகளில் முக்கியமானது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இத்தகைய வசதிகளை ஏற்படுத்துவதெனில் செலவு விசேஷமாக ஆகும். இதற்கு வேண்டிய அளவு பண உதவி செய்ய மத்திய சர்க்கார் முன்வந்திருப்பது மகிழ்ச்சிகரமானது. ஆனால் கல்லூரிப் படிப்பு விஷயத்தில் இன்னும் பலவிதமான சர்ச்சைகள் நடந்து வருகின்றன, அங்கு தற்போது சாதாரணமாக உள்ள நான்கு வருஷப் படிப்பில் ஒரு வருஷம் குறைப்பதா, அல்லது இன்னும் ஒரு வருஷம் கூட்டுவதா என்பது பற்றி காரசாரமான விவாதம் ஒரு புறம். இதைவிட எந்த பாஷையில் கல்லூரிகளில் போதனை நடப்பதென்பது பற்றி நடக்கும் வாக்குவாதம் இன்னும் தீவிரமானது, ராஜ்யக் கல்வி மகாநாட்டுக்குத் தலைமை வகித்த டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் சுட்டிக்காட்டியிருப்பது போல், இது உணர்ச்சி வேகத்தால் நேரான முடிவு காணக்கூடிய ஒரு விவகாரமன்று, கல்லூரிக்குக் கீழ்ப்பட்ட படிப்பைப் பற்றியவரை, தாய் பாஷை, அல்லது பிரதேச பாஷையிலேயே போதனை நடக்கவேண்டுமென்பதில் எள்ளளவும் சந்தேகத்துக்கு இடமில்லை, ஆனால் கல்லூரிப் படிப்பின் முக்கிய நோக்கம் என்ன என்பதை மனதில் கொண்டு அங்கு கையாள வேண்டிய போதன பாஷையை நிர்ணயிப்பது உசிதம், பல துறைகளிலும் உயர்தரமான, நவீன அறிவைப் பெறுவதே அந்நோக்கமாயின், நாம் ஆங்கில பாஷையைப் புறக்கணிப்பது சாத்தியமன்று சர்வதேச பாஷைகளில் முதல் ஸ்தானத்திலிருப்பது ஆங்கிலமே, அதிலேயே அறிவியல் நூல்கள் பலவும் குறிப்பாக விஞ்ஞான நுணுக்கங்கள் எல்லாம் உலகின் பல பாகங்களிலும் பரவி வருவது கண்கூடு. அந்த அறிவை நாமும் பெற்று நமது நாட்டின் துரிதமான முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துவதெனில், நமது கல்லூரிகளில் ஆங்கிலத்துக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுத்தே யாக வேண்டும், இதற்காக நமது தாய் பாஷை அல்லது பிராந்திய பாஷை ஒருபோதும் கல்லூரிகளில் போதன பாஷையாகாதென்பதில்லை, ஆனால் இதில் கண்முன்னுள்ள நிலையைக் காணாமல் அவசரப்படுவது பாஷைக்காக அறிவைக் காவு கொடுப்பதாகிவிடும் என்று மேற்குறித்த மகாநாட்டுத் தலைவர் விடுத்த எச்சரிக்கை நமது கல்விச் சீர்திருத்தக்காரர்களின் மனதில் பதியுமென்று எண்ணுகிறோம்,

அம்மகாநாட்டில் வெளியான பிரசங்கங்களில் ஒரு பெரும்பகுதி ஆசிரியர்களது உரிமையையும், அந்தஸ்தையும் பற்றியதாயிருப்பது மிகவும் பொருத்தமே. கல்விமுறை யாதாயினும், அது இனிது இயங்குவது முக்கியமாக ஆசிரியர்களையே பொறுத்திருக்கிறது, இதை சர்க்காரும் ஒப்புக்கொண்டபோதிலும், ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கத் தங்களிடம் பணமில்லையென்று வாதிக்கின்றனர். இது ஆசிரியர்களின் முக்கியத்தை உண்மையில் உணர்ந்திருப்பதற்கான ஒரு அறிகுறியன்று.

Edited and Published by A. K. S. Sarma, 87, Acharappan St., Madras.
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint Street, Madras-1.